# பிரபோத சிந்தாமணி

(தத்துவ, தர்ம, நீதிகளை கூறும் ஐம்பது கட்டுரைகள்)



ஆசிரியர்

வேதாந்த காமதேனு, வேதாந்த சூடாமணி

**வேத ப்ரஹ்ம ஸ்ரீ கெ. ஜி. சுப்ராயசர்மா**

# பிரபோத சிந்தாமணி

(தத்துவ, தர்ம, நீதிகளைக் கூறும் ஐம்பது கட்டுரைகள்)


ஆசிரியர்

அத்யாத்மவித்யாப்ரவீணர், வேதவித்யாபூஷணர், அத்வைதஜ்ஞானஸிந்து,
வித்யாவிதிநிதி, வேதாந்தவாரிதி, வேதாந்தபாஸ்கரர், வேதாந்தஸரஸ்வதீ,
வேதாந்தஸார்வபௌமர், வேதாந்த ராஜஹம்ஸர், வேதாந்த காமதேனு,
விவேக பாஸ்கரர், வேதாந்த கேஸரீ, வேதாந்த சிந்தாமணி, வேதஶ்ரீ,
அத்வைதவேதாந்தகேஸரீ, அத்வைத ஜ்ஞானதேஜர், சாஸ்த்ரநிதி,
வேதாந்தஸாகரம், வேதாந்தரத்தினம், அத்வைத ஸாரதிலகம்,
வேதாந்த ப்ரபாகரர், வேதாந்த சக்ரவர்த்தி, அத்வைத வேதாந்தவாரிதி,
அத்வைதவேதாந்த சூடாமணி,
ஸுசமீந்த்ரதீர்த்த ஸ்வாமீஜி ராஷ்ட்ரீய ஞானபுரஸ்கார் ப்ரசஸ்தி விஜேதர்
கர்னாடக அரசு ராஜ்ய ப்ரசஸ்தி புரஸ்க்ருதர்

**வேத ப்ரஹ்ம ஶ்ரீ கெ. ஜி. சுப்ராயசர்மா, M.A.,**

தமிழாக்கம்

**ஶ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்**



**வெளியிடுவோர்**

**ஶ்ரீ நித்யானந்த ப்ரகாசன**

**அசோகநகர், பெங்களூர்-560050**

**2005**

**PRABODHA CHINTAAMANI** in Tamil
(50 Independent Articles on Vedanta, Righteousness and Morals)
by **Veda Brahma Sri K. G. Subraya Sharma,** M.A.,
Published by Sri Nithyananda Prakashana
# 46, 4th Cross, Ashok Nagar, BSK 1st Stage
Bangalore-560 050; Ph: 080-2652 6027, 5767 0191
Pages viii + 50 + 2 = 60

**Price : Rs. 30/-**

First Edition: November 2005; 1000 Copies

© All Rights Reserved by the Author

**For copies please contact :**

Publisher : ***Sri Nithyananda Prakashana***
46, 4th Cross, BSK 1st Stage
Ashok Nagar, Bangalore - 560 050
080-2652 6027, 5767 0191

Author : ***Veda Brahma Sri K. G. Subraya Sharma***
T. R. Nagar, Bangalore-560 028
**Mobile: 98862 81622**

**விலை: 30/-**

Printed at
Gurudutt Printers Pvt. Ltd.
Bangalore - 560 026.



**என் மதிப்பிற்குரிய தாய் தந்தையராகிய**
**ஸ்ரீமதி சீதாலக்ஷ்மம்மா**
மற்றும்
**ஸ்ரீ கெ. என். குண்டப்பா அவர்கள்**

எனக்கு இந்த பவித்ரமான மனித சரீரத்தை அளித்து உரிய சமயத்தில் உபநயன சம்ஸ்காரத்தைச் செய்து, சுமார் பதினொன்று வயதிலேயே ஹொளேநரசீப்பூரிலிருந்த ஸ்ரீ ஸ்ரீ ஸச்சிதானந்தேந்த்ர சரஸ்வதீ மகா சுவாமிகளின் பரம பாவனமான பாதாரவிந்தங்களில் சத்குரு சேவைக்காக அன்புடன் ஒரு புஷ்பத்தைப்போல் என்னை சமர்ப்பித்தார்கள்.

சுமார் பதினாறு வருடகாலம் (1959-1975) அகண்ட சத்குரு சேவையின் மூலம் என்னை சத்குரு பரிபூர்ண கிருபா அனுக்கிரகத்திற்குப் பாத்திரமாகும்படிச் செய்த என் பூஜ்ய தாய் தந்தையரின் சரண கமலங்களில் இந்நூலைப் பக்தியுடன் சமர்ப்பிக்கிறேன்.

15-11-2005 கெ. ஜி. சுப்ராயசர்மா (ஆசிரியர்)

# ஆசிரியரின் முகவுரை

கன்னட மொழியில் 22,000 பிரதிகள் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ள **'பிரபோத சிந்தாமணி'** என்னும் நூல் ஆயிரக் கணக்கானோர் இதயங்களைக் கவர்ந்துள்ளது. நாம் அன்றாட வாழ்க்கையில் எளிதில் கடைபிடிக்கத் தகுந்த தர்மங்களை எல்லா மக்களும் உணரும் விதமாக எளிய நடையில் சுருக்கமாகவும், சரளமாகவும் இந்நூல் உணர்த்துகிறது.

கன்னடம் அறியாத தமிழ் அபிமானிகளின் வேண்டுகோளுக் கிணங்க இந்நூல் இப்பொழுது தமிழிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. குருபக்தரும், சன்மித்திரரும், ஆன்மீகரும் ஆன மதிப்பு மிக்க ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர் அவர்கள் இந்நூலைத் தமிழில் சிறப்பாக மொழி பெயர்த்துள்ளார்.

இப்புத்தகத்தை நன்கு அச்சிட்டு அளித்த ஸ்ரீ குருதத் பிரின்டர்ஸ் உரிமையாளர்கள் திரு. மோகன் குமார் மற்றும் திரு. சத்திய நாராயண அவர்களுக்கும், நூலை வெளியிட்டுள்ள ஸ்ரீ நித்யானந்த பிரகாசன உரிமையாளர் திரு. பி. என். நடராஜ் அவர்களுக்கும் தமிழில் மொழிபெயர்த்த குருபக்தர் எஸ். ராமசந்திர ஐயர் அவர்களுக்கும், அச்சுகளைத் திருத்த உதவிய அன்புமிக்க சகோதரி ஸ்ரீமதி மீனா கிருஷ்ணஸ்வாமி, நன்பர் Dr. சுதாகர் மரூர் அவர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைவன் மற்றும் சத்குரு இவர்கள் அனைவருக்கும் எல்லாவித நன்மைகளையும் அளிக்கும்படி வேண்டுகிறேன். இந்த நூலினால் தமிழ் வாசகர்களுக்குச் சிறிதேனும் பயன் ஏற்படு மானால் என்னுடைய பணி பயனுள்ளதாயிற்று என்று மகிழ்ச்சி அடைவேன்.

॥ நமோ நம: ஸத்குருபாதுகாப்யாம் ॥

68, 2 வது ப்ளாக்
தியாகராஜ நகர், பெங்களூர் 560 028
மொபைல்: 98862 81622

கெ. ஜி. சுப்ராயசர்மா
ஸத்குருபாதரேணு:
15-11-2005

# நூல் ஆசிரியர் ஸ்ரீ கெ. ஜி. சுப்ராயசரமா

கர்நாடக மாநிலம், மண்டியா ஜில்லா, கெ. ஆர். பேட்டை தாலூக்காவில் அமைந்துள்ள கிக்கேரி என்னும் சிறு கிராமத்தில் ஸ்ரீமதி சீதாலக்ஷ்மம்மா மற்றும் ஸ்ரீ கெ. என். குண்டப்பா, ஆகிய புண்ணிய தம்பதிகளின் மகன் ஸ்ரீ சுப்ராயசர்மா ஆவார். சிறுவயதிலேயே உபநயன சம்ஸ்காரம் செய்விக்கப்பட்டு ஹொளே நரசீப்பூர் அத்யாத்ம பிரகாச கார்யாலய ஸ்தாபகராகிய ஸ்ரீ ஸ்ரீ ஸச்சிதானந்தேந்த்ர சரஸ்வதீ ஸ்வாமிகளின் சிஷ்யராகும் பெரும் பேறு பெற்றார். 1959-1975 வரை சத்குரு சேவை செய்து, ஸ்ரீ மகாஸ்வாமிகளிடம் வேதாந்த பாடங்களை அத்யயனம் செய்யும் பேறும் பெற்றார்.

1965 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை ஸ்ரீ சுப்ராயசர்மா அவர்கள் வேதாந்த அத்யயனம், அத்யாபனம், மற்றும் வேதாந்த சிந்தனைகளிலேயே எப்பொழுதும் முழுகி ஸஞ்சாரி வேதாந்தி என்னும் பிரசித்தி அடைந்துள்ளார்.

1967 ஆம் ஆண்டிலிருந்து 1975 ஆம் ஆண்டுவரை ஸ்ரீ ஸ்ரீ மகா ஸ்வாமிகளின் ஆப்த காரியதரிசியாக சேவை செய்துவந்தார். குருவின் நெருங்கிய தொடர்பினால் அவருடைய பரிபூர்ண அன்பிற்குப் பாத்திரராகி, குருவின் புத்திரனாகவே வாழும் பெருமையும் பெற்றுள்ளார்.

1995 ஆம் ஆண்டில் அமெரிக்கா நாட்டிற்குச் சென்று சுமார் 60 நாட்கள் அங்குள்ள ஜிஜ்ஞாஸுகளுக்கு வேதோபநிஷத் மற்றும் புராண இதிகாசங்களின் சந்தேசங்களை அறிவுறுத்தி வந்தார். வெளிநாடுகளிலும் சுப்ராயசர்மா அவர்கள் பிரசித்தி பெற்ற வேதாந்தப் பிரவசகராக புகழ் பெற்றுள்ளார்.

15-11-2005 —எஸ். ராமசந்திர ஐயர்

## இந்த நூலை அச்சிடுவதற்கு அன்புடன் உதவிய ஸத்குரு பக்தர்களின் சுப நாமங்கள்

| | | | ரூபாய் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீமதி எஸ். ராஜேச்வரீ சர்மா | பெங்களூர் | 1,008 |
| 2. | வேத ப்ரஹ்ம ஸ்ரீ கெ. ஜி. சுப்ராயசர்மா | பெங்களூர் | 1,008 |
| 3. | ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர் | பெங்களூர் | 1,008 |
| 4. | ஸ்ரீமதி பி. என். கீதா ராவ் | பெங்களூர் | 1,008 |
| 5. | ஸ்ரீ ஸி. ஏ. ஸஞ்ஜீவமூர்த்தி | பெங்களூர் | 1,008 |
| 6. | ஸ்ரீ ஆர். ஜி. நடராஜன் | பெங்களூர் | 1,008 |
| 7. | ஸ்ரீமதி சாந்தா நடராஜன் | பெங்களூர் | 1,008 |
| 8. | ஸ்ரீ என். கார்த்திகேயன் | பெங்களூர் | 1,008 |
| 9. | ஸ்ரீ அரவிந்த ஸின்ஹா | பெங்களூர் | 1,008 |
| 10. | ஸ்ரீமதி மஞ்ஜூஷா ஸின்ஹா | பெங்களூர் | 1,008 |
| 11. | குமாரி அந்தரா மானினீ | பெங்களூர் | 1,008 |
| 12. | ஸ்ரீ ராம சர்மா | பெங்களூர் | 1,008 |
| 13. | ஸ்ரீ வி. ராமு | பெங்களூர் | 1,008 |
| 14. | ஸ்ரீமதி லீலா ராமு | பெங்களூர் | 1,008 |
| 15. | ஸ்ரீ ஸுரேச் ராமு | பெங்களூர் | 1,008 |
| 16. | ஸ்ரீமதி சசீதேவி | பெங்களூர் | 1,008 |
| 17. | குமார் ரங்கதாம | பெங்களூர் | 1,008 |
| 18. | ஸ்ரீமதி எஸ். ஸௌம்யா | பெங்களூர் | 1,008 |
| 19. | குமாரி ச்வேதா | பெங்களூர் | 1,008 |

இவர்கள் அனைவருக்கும் இறைவன் சுகம், சாந்தி, சந்தோஷம் மற்றும் ஞான பக்தி வைராக்கியங்களையும் அளிக்கட்டும்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மனிதத் தன்மை | 1 |
| 2. | நமக்கு நாமே சிற்பிகள் | 2 |
| 3. | தவத்தின் தேவை | 3 |
| 4. | சாந்தி மந்திரங்கள் உலக அமைதிக்கு வழி | 4 |
| 5. | முரட்டுக் குதிரைகள் | 5 |
| 6. | நம் சரீரம் ஒரு திவ்ய ரதம் | 6 |
| 7. | தர்மத்தின் மூன்று முகங்கள் | 7 |
| 8. | நானே பரஞ்ஜோதி | 8 |
| 9. | செவிகளும் கண்களும் | 9 |
| 10. | இரண்டுக்கும் மனதே காரணம் | 10 |
| 11. | மாணவர்களின் மூன்று இலட்சணங்கள் | 11 |
| 12. | சத்குருவின் அனுக்கிரகம் | 12 |
| 13. | தூய உணவின் மகிமை! | 13 |
| 14. | இலட்சிய தம்பதிகள் | 14 |
| 15. | குருவின் பெருமை | 15 |
| 16. | சத்சங்கத்தின் மகிமை | 16 |
| 17. | வார்த்தைகளின் மந்திர சக்தி | 17 |
| 18. | ஆரோக்கியத்திற்கு மூன்று வழிகள் | 18 |
| 19. | உலகத்திற்கான வேதப் பிரார்த்தனைகள் | 19 |
| 20. | அவனில்லாமல் எதுவும் இல்லை | 20 |
| 21. | மனம் ஒரு குரங்கு | 21 |
| 22. | பெண்கள் அனைவரும் அன்னைகளே! | 22 |
| 23. | அமிர்தம் போன்ற இரு கனிகள் | 23 |
| 24. | சத்தியமே உயர்ந்த தவம் | 24 |
| 25. | கர்மமும் கர்மயோகமும் | 25 |

| | | |
|---|---|---|
| 26. | யாரும் ஏழைகள் அல்லர் | 26 |
| 27. | நரகத்தின் மூன்று வாயில்கள் | 27 |
| 28. | தியாகத்தினால் ஆனந்தம் | 28 |
| 29. | ஞானமே மேலான சம்பத்து | 29 |
| 30. | பேராசையினால் தான் துன்பம் | 30 |
| 31. | உயிர் வாழும் போதே செய்ய வேண்டும் | 31 |
| 32. | சுகம் நம்மிடமே உள்ளது | 32 |
| 33. | எளிமையினாலே சுகம் | 33 |
| 34. | இயற்கை கற்றுத் தரும் பாடங்கள் | 34 |
| 35. | இதுவும் இறைவனின் பூஜையல்லவா? | 35 |
| 36. | தர்மத்தின் பத்து முகங்கள் | 36 |
| 37. | ஏறுவது கஷ்டம், விழுவது சுலபம்! | 37 |
| 38. | மனிதர்களாக வாழ்வோமா? | 38 |
| 39. | உலகை வெல்லும் வழி | 39 |
| 40. | மனமே மந்திரம் ஆகட்டும் | 40 |
| 41. | எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை! | 41 |
| 42. | விஞ்ஞானமும் வேதாந்தமும் | 42 |
| 43. | இது பிரம்ம ஞானத்தின் மகிமை | 43 |
| 44. | ‘த’ காரத்தின் மூன்று சந்தேசங்கள் | 44 |
| 45. | ஏன் மனிதர்களுக்கே உபதேசங்கள்? | 45 |
| 46. | பிரம்மச்சர்யத்தின் ஐந்து முகங்கள் | 46 |
| 47. | ஏழு எச்சரிக்கை மணிகள் | 47 |
| 48. | மரணத்தைக் கண்டு ஏன் மிரட்சி? | 48 |
| 49. | சூரியனும் விளக்கிக் காட்ட முடியாதது | 49 |
| 50. | செல்வமா? சாந்தியா? | 50 |

# 1. மனிதத் தன்மை

இந்த விச்வம் முழுவதும் பரமாத்மாவிலிருந்தே உண்டாகி யுள்ளது என்று வேத சாஸ்த்திரங்கள் கூறுகின்றன. விச்வத்தை அசைவுள்ளவை அசைவற்றவை, சேதனம் அசேதனம் என்று இரண்டாகப் பிரிக்கலாம். இதையே சரம் அசரம் என்றும் கூறுவர். இந்த சேதன விச்வத்தில் 84 லட்சம் வகையான ஜீவராசிகள் உள்ளதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன.

புண்ய கர்மம், புண்யபாப கர்மம், மற்றும் பாப கர்மம் போன்றவற்றின் பலன்களால் தேவ ஜன்மம், மனித ஜன்மம் மற்றும் அசுர ஜன்மம் ஏற்படுகின்றன. தேவதைகள் பிறவியிலேயே சித்த புருஷர்களாக தேவ லோகத்திலும், அசுரர்கள் அரக்க குணத்தவர் களாக பாதாள லோகத்திலும், மனிதர்கள் பேராசை உள்ளவர் களாக பூலோகத்திலும் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன.

தேவதைகள், அசுரர்களைப் பற்றிய விசாரம் மனிதராகிய நமக்குத் தேவையில்லை. நம்மைப் பற்றியே தெரிந்து கொள்ள நேரம் இல்லாத பொழுது பிறரைப் பற்றி சிந்திப்பது தேவையற்றது அல்லவா ?

சரி, நாம் யார் ? நாம் தேவதைகள் அல்லர் மற்றும் அசுரர்களும் அல்லர். நாம் வெறும் மனிதர்களே! மனிதர்களாகிய நாம் எவ்வாறு மனிதர்களாக வாழவேண்டும் என்பதைக் கற்போம். மனிதத் தன்மை என்றால் ஒருவருக்கொருவர் அன்பு, பரிவு, இரக்கம், கருணை, நம்பிக்கை, நட்பு, சகோதரத்துவம், நேர்மை, எளிமை— ஆகிய நற்பண்புகளோடு வாழ்வது அல்லவா ?

‘பேச்சு’ இறைவன் மனிதருக்கு அளித்திருக்கும் அருமையான வரம். பேச்சிலிருந்தே தான் சுகமும் துக்கமும், சொர்க்கமும் நரகமும் உண்டாகின்றன. இனிய அன்பான சொற்களால் நாம் வாழும் நாட்டை இராம ராஜ்ஜியமாக மாற்றுவோம். மனித நேயம் நிறைந்தவர்களாக அனைவரையும் அரவணைத்துச் செல்வோம்.

**லக்ஷ்மீர்வஸதி ஜிஹ்வாக்ரே ஜிஹ்வாக்ரே மித்ரபாந்தவா:।**
**ஜிஹ்வாக்ரே பந்தனம் ப்ராப்தம் ஜிஹ்வாக்ரே மரணம் த்ருவம்॥**

இறைவன் அருளால் நம் பேச்சுக்கள் யாவும் அன்புடைய தாகட்டும். இது அல்லவா மனிதத் தன்மை!

## 2. நமக்கு நாமே சிற்பிகள்

நம்மைச் சுற்றியுள்ளவர்கள் எப்பொழுதும் அவரவர் கஷ்டங்களையே நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்கள். சிலர் தாம் பிறந்ததிலிருந்து இது நாள்வரை வெறும் துன்பங்களையே அனுபவித்துக் கொண்டு வருவதாகவும், சுகங்களை அனுபவித்ததே இல்லை என்றும் கூறி கடவுளையே திட்டிக் கொண்டும் இருப்பார்கள்.

மனிதனுக்கு வயது கூடக்கூட துக்க சிந்தனைகளும் அதிகமாகின்றன. இந்த துக்கம் நமக்கு எதனால் ஏற்படுகிறது? நம்முடைய அறியாமையாலேயே உண்டாகிறது. இதற்காக பகவானை நிந்தனை செய்வது மூடத்தனம் அல்லவா!

பகவான் நமக்கு விவேகம், ஆராய்ந்துணரும் சக்தி எல்லாம் கொடுத்துள்ளார். அதைச் சரியாக உபயோகித்தால் துக்கமே இருக்காது. நம்முடைய சுயநலம், பேராசை, விவேகமின்மை, கோபம், ஒழுக்கமின்மை இவைகளாலேயே நமக்குத் துன்பங்கள் உண்டாகின்றன.

மனிதன் தன் தகுதியை உணர்ந்து கொள்ளாமல் பிறரைப் போல் வாழ ஆசைப்படுகிறான். தன் சக்திக்கும் மீறி கடன் வாங்கி ஆடம்பர வாழ்க்கையினால் பட்ட கடனுக்கு வட்டி கட்ட முடியாமல் கஷ்டப்படுகிறான். இதற்கு யார் பொறுப்பு?

ஒவ்வொருவரும் தமது சுக துக்கத்திற்குக் காரணமான சிற்பிகளாவர். நம்மை விட கீழான நிலையில் இருப்பவரைப் பார்த்து நம் ஜீவிதத்தை நன்றாக நடத்த முடியாதா? எவ்வளவு செல்வந்தனாக இருந்தாலும் அவனைவிட மேலான நிலையில் உள்ளவரைப் பார்த்துப் பொறாமைப்பட்டால் அவன் எப்பொழுதும் தரித்திரன் தான்.

> அதோSத: பச்யத: கஸ்ய மஹிமா நோபசீயதே।
> உபர்யுபரி பச்யந்த: ஸர்வ ஏவ தரித்ரதி॥

நம் சுகதுக்கத்திற்கும், கஷ்ட நஷ்டம், மற்றும் நோய் நொடிகளுக்கும் நாமே காரணம். பகவான் அளித்துள்ள விவேகத்தை பயன்படுத்தி உத்தமச் சிற்பிகளாக நாமும் சந்தோஷமாக வாழ்ந்து மற்றவர்களையும் சந்தோஷப் படுத்துவோமாக.

# 3. தவத்தின் தேவை

தவம்! இந்தச் சொல் சிலருக்குத் திகைப்பூட்டுவதாக உள்ளது. தவம் என்றால் உபவாசம், வனவாசம், மௌனம், வைராக்கியம், பிரம்மச்சர்யம், அஹிம்சை—இவைகளே அவர்கள் மனதில் தோன்றுகின்றன. இப்படிப்பட்ட தவம் உண்மையில் கடினமானது தான். ஆகையால் தான் இக்காலத்தில் தவம் என்பதே நடைமுறையில் இல்லாமல் போய்விட்டது.

தவத்தைப் பற்றிச் சொல்பவரும், கேட்பவரும் குறைவாகவே உள்ளனர். தவத்தை அனுஷ்டானம் செய்பவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இன்றைய மனிதர்களுக்கு தவத்தின் பொருள் புரிவதில்லை. அதனால் தவம் என்றாலே அலர்ஜியாக உள்ளது.

தவம் சன்னியாசிகளுக்கோ, சாதகர்களுக்கோ மட்டுமானது அல்ல. அன்றாட வாழ்வில் எல்லோருக்கும் தேவையான சாதனமே ஆகும். பண்டிதர்கள், மாணவர்கள், சிறியவர்கள், பெரியவர்கள், எல்லோருக்கும் அன்றாட வாழ்க்கையில் தவம் மிகவும் தேவை.

தவம் என்றால் என்ன? தபதி இதி தப:, நம் பாவங்கள் மற்றும் தோஷங்களைச் சுடக்கூடிய சக்தியே தவம். ஒவ்வொரு மனிதனும் தெரிந்தோ தெரியாமலோ தவறுகளைச் செய்துகொண்டே இருக்கிறான். உடம்பினால், கண் காது, நாக்கு மற்றும் மனதினால் மனிதன் பாவங்களைச் செய்கிறான். இவ்வாறு திரிகரணங்களால் செய்யும் பாவங்களைச் சுட்டுச் சாம்பலாக்கும் சாதனையே தவமாகும்.

சத்தியத்தை விட பெரிய தவம் இல்லை. செய்த தவறுகளை உணர்ந்து வருந்துவதை விட வேறு தவம் உண்டா? அன்பு, பரிவு, நேர்மை, வாக்குத் தவறாமை எல்லாமே தவம் அல்லவா? நீளமான தாடி, பெரிய குங்குமப் பொட்டு, விபூதிப்பட்டை, காவியாடை ஆகியவை அணிந்திருந்தாலும் மனதில் சகோதரத்துவம், நட்பு, அன்பு, கடமையுணர்வு, ஏகாக்கிரதை இவையோடு இருப்பதுதான் நிஜமான தவம். தவத்தினால் மனிதன் இந்த விச்வம் முழுவதற்கும் ஆனந்தத்தைத் தரமுடியும். தவத்தினால் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம். **தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ। தபோ ப்ரஹ்மேதி; யஸ்ய ஜ்ஞானமய தப:।** என்று உபநிஷத்துகள் கூறுகின்றன அல்லவா? இத்தகைய தவம் யாருக்குத் தான் வேண்டாம்?

# 4. சாந்தி மந்திரங்கள் உலக அமைதிக்கு வழி

'வேத'ங்கள் ஒரு ஞானப்பெட்டகம்; 'வேதங்கள்' ஞானக் கடல்; வேதங்கள் பகவானுடைய நேரான உபதேசங்கள். ஜாதி, வர்ணம், ஆசிரமம், மதம், மார்க்கம்—முதலிய எந்த பேதமு மில்லாமல் எல்லா மனிதர்களுக்கும் மேன்மை, சாந்தி, ஆனந்தங் களை அளிக்கும் 'அபௌருஷேய' (மனித முயற்சியால் உருவாக்கப்படாத) நூல்கள் தான் வேதங்கள்.

வேதங்களில் நூற்றுக் கணக்கில் சாந்தி மந்திரங்கள் உள்ளன. இவை யாவும் உலக அமைதியையே வலியுறுத்துகின்றன. இவற்றில் ஒன்றைப் பார்ப்போமாக :

**ஸஹ நாவவது। ஸஹ நௌ புனக்து। ஸஹவீர்யம் கரவாவஹை। தேஜஸ்வி நாவதீதமஸ்து। மா வித்விஷாவஹை। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:॥** இது யஜுர்வேதத்தின் பிரசித்தமான சாந்திமந்திரம். இதனுடைய பொருள் மிக உயர்வானது. "நாம் எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருப்போமாக. நாம் சேர்ந்தே சுகதுக்கங்களை சமமாகப் பங்கு கொள்வோமாக. நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து நாட்டை பெருமையுள்ளதாக, உருவாக்குவோமாக. நாம் செய்யும் எல்லாச் செயல்களையும் நல்லதாகச் செய்வோம். நாம் ஒருவரை ஒருவர் வெறுக்காமல் இருப்போம். யாரையும் வெறுக்காமல் எல்லோரையும் அன்புடன் பார்ப்போமாக!"

இந்த சாந்தி மந்திரம் உலக அமைதியைக் கூறும் மிக உயர்ந்த மந்திரம் அல்லவா ? இப்படிப் பட்ட சாந்தி மந்திரங்களின் கடலே வேதங்கள் ஆகும். இத்தகைய வேதங்களை நாம் காப்பாற்ற வேண்டாமா ? இந்த வேத உபதேசங்களின் சிந்தனை மூலம் விருப்பு, வெறுப்புகளை நீக்கிக் கொள்வோம்.

உலக அமைதிக்காக வேதங்கள் சொல்லும் மார்க்கத்தில் நாம் நடப்போமாக. நாம் எல்லோரும் ஒரே இறைவனின் மக்கள் அல்லவா ? ஒரே சர்க்கரையில் தயாரிக்கப்படும் வேறு வேறு இனிப்பு களும் சர்க்கரையே ஆகுமல்லவா ? நம் ஆசார விசாரங்கள், உடை கள், பழக்க வழக்கங்கள், மொழிகள் முதலானவை வேறு வேறாக இருந்தாலும் நாம் எல்லோரும் ஒரே மனித இனம் தான். அனைவ ரும் சகோதரர்களே. இதுவே சாந்தி மந்திரங்களின் உபதேசமாகும்.

# 5. முரட்டுக் குதிரைகள்

மனிதராகிய நமக்கு இறைவன் பத்து இந்திரியங்களை அருளியுள்ளார். கண், காது, மூக்கு, நாக்கு, சருமம் என்ற ஐந்து ஞானேந்திரியங்களும், வாக்கு, கை, கால், பாயு, உபஸ்தை ஆகிய ஐந்து கர்மேந்திரியங்களும் ஆகிய இந்த பத்து இந்திரியங்களாலும் மனிதன் எல்லா சுக துக்கங்களையும் அனுபவிக்கிறான்.

உபநிஷத்துக்களில் இந்த இந்திரியங்கள் முரட்டுக் குதிரைகள் (துஷ்டாச்வா இவ ஸாரதே:) என்று வர்ணிக்கப் படுகின்றன. ரதம் நன்றாக இருக்கலாம், சாரதியும் புத்திசாலியாக இருக்கலாம், வீதியும் நன்றாக இருக்கலாம். ஆனால் குதிரைகள் அடங்காததும், முரட்டுத்தனம் உடையனவாகவும் இருந்தால் பயணம் செய்பவர் களுக்கு அபாயம் ஏற்படலாம். எச்சரிக்கை!

நம் இந்திரியங்களும் முரட்டுக் குதிரைகள் போன்று இருக்கின்றன. குதிரைக்குக் கடிவாளம் எத்தனை அவசியமோ, அதைப் போல் இந்திரியங்களுக்கு விவேகம் அவசியம். கடிவாள மில்லாத குதிரைகள் ரதத்தையும், சவாரி செய்பவரையும் பள்ளத்தில் தள்ளி விட்டு விடுகின்றன. அது போல் குருவின் மார்க்க தரிசனமும், விவேக விசாரமும் இல்லாவிட்டால் இந்திரியங்கள் நம்மைத் துக்கக் கடலில் வீழ்த்தி விடுகின்றன.

மனிதர்களாகிய நாம் கடவுள் நமக்குக் கொடுத்துள்ள விவேக சாமர்த்தியத்தையும், சரி–தவறு என்று ஆராயக்கூடிய அறிவையும் சரியான வழியில் உபயோகப்படுத்த வேண்டும். அப்பொழுது தான் இந்திரியங்களை நல்வழிப் படுத்த முடியும்.

பழக்கிய குதிரைகளினால் தான் நம் பிரயாணம் பாதுகாப்பான தாகிறது. அவ்வாறே விவேக சாமர்த்தியத்தால் பழக்கிய இந்திரி யங்கள் நம் வாழ்க்கையையும் சுகமானதாக மாற்றுகின்றன. ஸத் விசாரம், பகவத் பக்தி, சாத்வீக சிந்தனை, ஸத் சங்கம், வேதாந்த சிந்தனைகள் முதலான சாதனைகளினால் நாம் இந்த முரட்டு இந்திரியங்களை நல்ல வழியில் செலுத்துவோமாக! சாத்வீக இந்திரியங்களால் சாசுவதமான சுகம் கிடைக்கும். விவேகத்தால் செம்மைப்படுத்தப்பட்ட இந்திரியங்களால் நாமும் இராம ராஜ்ஜி யத்தை ஏற்படுத்தலாம்.

# 6. நம் சரீரம் ஒரு திவ்ய ரதம்

மனித சரீரமானது கடவுள் கொடுத்த மகா பிரசாதமாகும். இறைவன் அருளினால் கிடைத்துள்ள இந்த சரீரம், பூர்வ புண்ணிய பலனாலும் நமக்கு அமைந்துள்ள திவ்ய சரீரம் ஆகும். மனித உடம்பைக் கடைகளில் வாங்க முடியாது. இது விற்பனைக்கான ஒரு பொருளும் அல்ல. கார், டிவி, குளிர்சாதனப்பெட்டி, மற்றும் தொலைபேசி போன்று மனித சரீரம் எந்த தொழிற் சாலையிலும் தயாரிக்கப்படும் வஸ்துவும் அல்ல.

மனித சரீரம் விலைமதிப்பற்ற, அதிசயமான ஒரு வஸ்து. இது மிகவும் பரிசுத்தமானதும், உயர்ந்ததும், மங்களமும் ஆனது என்பதை நாம் மறக்கக் கூடாது. இத்தகைய நன்மையளிப்பதும், அழகானதுமாகிய, உடம்பை அடைந்த நாம் மிகவும் அதிர்ஷ்ட சாலிகளே.

வேதோபநிஷத்துக்கள் சரீரத்தை ஒரு ரதத்திற்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளன. ரதம் என்பது பழங்காலத்தில் வழக்கிலிருந்த ஒரு வாகனம். ரதத்தை இன்றைய கார், அல்லது ஸ்கூட்டருக்கு ஒப்பிட லாம். நம் தேகமானது ஒரு காரைப் போன்று உபயோகமாக உள்ளது. வாகனங்களின் உதவியால் பயணங்கள் வேகமாகவும், சுலப மாகவும் அமைகின்றன. அதே சமயம் கால்நடையாக ஒரு ஊரை அடைய நீண்ட நேரமும் உடல் சிரமும் அடைகிறோம் அல்லவா?

இந்தச் சரீரம் என்னும் ரதத்தினால் மனிதன் மேற்கொள்ளும் பயணத்தின் குறிக்கோள் மோட்சம் ஆகும். கடவுளை அடைதலே முக்தி அல்லது மோட்சம். சரீரமாகிய ரதத்தை விவேகத்துடனும் எச்சரிக்கையோடும் உபயோகித்தால், பிறவிப் பயனாகிய முக்தியை அடையலாம்.

சரீரம் என்பது ஒரு வாகனத்தைப் போன்றதே அல்லாமல் சரீரம் 'நாம்' அல்ல. மனிதன் வாகனத்தைத் தன் பிரயாணங்களுக்கு மட்டுமே உபயோகித்துக் கொள்கிறான். இந்த வாகனத்தையே நான் என்று சொல்பவன் மூடன் அல்லவா? அதைப் போல் இறைவன் அளித்துள்ள, நன்மையளிப்பதும், அழகானதும் ஆன ரதமாகிய உடலை நல்ல முறையில் பயன்படுத்தி, மனித ஜன்மத்தின் ஒரே குறிக்கோளான முக்தியை அடைவோமாக.

# 7. தர்மத்தின் மூன்று முகங்கள்

"தரதி இதி தர்ம:" என்ற வாக்குப்படி, உலகை எல்லா விதத்திலும் இயக்கும் சக்தியே **தர்மம்**. எல்லா மனிதர்களையும் காப்பாற்றும் சக்தியே **தர்மம்**. இத்தகைய உயர்ந்த தர்மத்தையே நாம் அனுஷ்டானம் செய்ய வேண்டும். இதைத் தர்க்கத்தினாலோ, பிரவசனங்களினாலோ ஆராய்ச்சி செய்வது முறையற்றது.

கீழ்வரும் மந்திரம் தர்மத்தின் மூன்று முகங்களைத் தெரிவிக் கிறது. **'ஸத்யம்வத, தர்மம் சர, ஸ்வாத்யாத் மா ப்ரமத:'** (தைத்திரீயோபநிஷத்) சத்தியத்தைச் சொல், தர்மத்தை அனுசரி, குலதர்மத்தைக் கைவிடாதே என்று வேதம் மனிதனுக்கு எச்ச ரிக்கை செய்கிறது.

**தர்மம்** என்பது நேர்மையான மார்க்கம். தனக்கும் பிறருக்கும் நன்மையை மட்டுமே கொடுக்கும் வழி முறைகளே தர்ம மார்க்கம் ஆகும். நம் வாழ்க்கையில் தர்ம மார்க்கத்தையே அனுசரிக்க வேண்டும். அதர்மத்தைப் பின்பற்றக் கூடாது. எதைச் செய்யும் போது மனம் அஞ்சுகிறதோ அது **அதர்மம்**. எதை அனுஷ்டானம் செய்யும்போது, மனம் தைரியமாகவும் சந்தோஷமாகவும் இருக் கிறதோ அது **தர்மம்** ஆகும். பரோபகாரம் செய்யும்பொழுது மனம் சந்தோஷமாக இருக்கிறது அல்லவா ? இதுதான் **தர்மம்.**

தர்மத்தின் இரண்டாவது முகம் 'ஸத்யம் வத' சத்தியத்தையே சொல்ல வேண்டும். சத்திய வசனத்திற்கு மேலான தர்மம் உண்டா ? சத்திய வசனம் என்பது நம் வாக்கிலிருந்து வருவது. பகவான் மனிதனுக்கு நாக்கைக் கொடுத்திருப்பது சத்தியத்தைச் சொல் வதற்கே. சத்தியம் தான் தர்மத்தின் இரகசியம். சத்தியம் தான் சாதனைகளின் இரகசியம்.

தர்மத்தின் மூன்றாவது முகம் 'ஸ்வாத்யாயான்மா ப்ரமத:' ஸ்வாத்யாயம் என்பது தன்னுடைய மதத்தின், தர்ம சம்பிர தாயத்தைக் கூறும் நூல்களைக் கற்பதாகும். பின் அந்தத் தர்மங்களைப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பது. மனிதன் பொருள் செலவில்லாமலும் கஷ்டமிலலாமலும் சுலபமாக அனுஷ்டானம் செய்வதால் உலகம் முழுவதும் சுகம், சாந்தி மற்றும் ஆனந்தம் உண்டாகிறது.

# 8. நானே பரஞ்ஜோதி

நம் நிஜ சொருபத்தைக் காண்பித்து, ஜகத்திற்குப் பரம சாந்தியை அளிப்பதே எல்லா மதங்கள், தர்மங்கள் மற்றும் சாஸ்திரங்களின் குறிக்கோள். குரு சிஷ்யர் இருவரின் கேள்வி பதில்களின் மூலம், உபநிஷத்துக்கள் தர்மத்தின் சொரூபத்தையும், பரப்பிரம்ம தத்துவத்தையும் தெரிவிக்கின்றன. ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் பிரசித்தமான **'ஏகச்லோகி'** என்னும் ஸ்லோகத்தில் நானே ஜ்யோதி என்று கூறியுள்ளார்.

**கிம் ஜ்யோதிஸ்தவ பானுமான் அஹனி மே ராத்ரௌ ப்ரதீபாதிகம்**
**ஸ்யாதேவம் ரவிதீபதர்சனவிதௌ கிம் ஜ்யோதிராக்யாஹி மே।**
**சக்ஷுஃஸ்தஸ்ய நிமீலனாதிஸமயே கிம் தீர்தியோ தர்சனே**
**கிம் தத்ராஹமதோ பவான் பரமகம் ஜ்யோதிஸ்ததஸ்மி ப்ரபோ॥**

குரு பாத யாத்திரையாக வரும்பொழுது, ஒரு சீடன் குருவை அணுகி, நமஸ்காரம் செய்து, தன் கஷ்டங்களுக்குத் தீர்வு அளிக்குமாறு வேண்டுகிறான். அப்பொழுது குருவானவர் இவ்வாறு கேட்கிறார்:

**குரு :** ஒ, சிஷ்யனே, உனக்கு எது வெளிச்சம் அளிக்கிறது ?

**சிஷ்யன் :** பகலில் சூரிய வெளிச்சம்.

**குரு :** சரி, இரவில் ?

**சிஷ்யன் :** சந்திரன் மற்றும் தீபங்கள்.

**குரு :** சூரியன், சந்திரன், தீபங்களை எவ்வாறு காண்கிறாய் ?

**சிஷ்யன் :** கண்களினால் காண்கிறேன்.

**குரு :** கண்ணை மூடிக் கொண்டிருக்கும்பொழுது எது ஜோதி ?

**சிஷ்யன் :** புத்தி.

**குரு :** அந்த புத்தியையும் பிரகாசிக்கச் செய்யும் ஜோதி எது ?

**சிஷ்யன் :** அது நானே தான்.

**குரு :** அப்பொழுது நீயே அந்த பரஞ்ஜோதியாக இருக்கிறாய் அல்லவா ?

**சிஷ்யன் :** ஆம், நானே பரஞ்ஜோதி!

இந்த உண்மையை அறிந்தபின் சிஷ்யனின் சந்தேகங்கள் தீர்ந்து விடுகின்றன.

# 9. செவிகளும் கண்களும்

நமக்கு இறைவன் இரண்டு கண்களையும், இரண்டு செவிகளையும் கொடுத்துள்ளான். செவிகளினால் சப்தங்களைக் கேட்கவும், கண்களினால் காட்சிகளைப் பார்க்கவும் முடிகிறது. காது கேட்காதவர்கள் கூட எப்படியோ வாழ்க்கையை நடத்து கின்றனர். குருடராக இருந்தாலோ வாழ்க்கை மிகவும் கடினமே.

கண்களினால் வர்ணங்கள், உருவங்கள், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மலை, நதி, காடு ஆகிய எல்லா இயற்கைக் காட்சிகளையும் பார்த்து ஆனந்தப் படுகிறோம். ஆகையால் கண் தான் நமக்குத் தெய்வம், பெரிய சம்பத்து என்றும் கூறலாம். **ஸர்வேந்த்ரியாணாம் நயனம் ப்ரதானம்** என்பது சான்றோர் வாக்கு.

செவிகளினால் உள்ள பயன் என்ன ? வேதாந்தங்களில் சொல்லியிருக்கும் உபதேசங்களைச் செவியினால் கேட்க முடியுமே தவிர கண்களினால் பார்க்க முடியாது. மனிதனுக்கு ஞானத்தைப் பெறுவதற்குச் செவிதான் முக்கிய சாதனம். பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்கள் சொல்வதை மாணவர்கள் செவியால் கேட்கும் பொழுது தான் அர்த்தமாகிறது. அதேபோல் வேத சாஸ்த்திர உபதேசங்களையும் செவியால் தான் கேட்க வேண்டும்.

வேதங்களில், "பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா:," ஓ தேவதைகளே ! ஓ பரமாத்மனே ! நாங்கள் செவிகளால் எப்பொழுதும் வேதோபதேசங்களை கேட்கும்படி ஆகட்டும் என்று தான் பிரார்த்திக்கிறார்கள். ஸத் விசாரங்களையும், உத்தம உபதேசங் களையும் சாதுக்களின் சந்தேசங்களையும் மீண்டும், மீண்டும் கேட்பதினால் தான் நமக்கு நல்ல அறிவு உண்டாகிறது அல்லவா ?

காதுகளுக்குக் கதவு இல்லை, ஏன் ? சதா சர்வ காலமும் நாம் நல்ல வார்த்தைகளையும் நல்ல உபதேசங்களையும் கேட்டுக் கொண்டே இருக்கவேண்டும் என்பதற்காக. ஆனால், கண்க ளுக்குக் கதவு இருக்கிறது. ஏனென்றால் தேவையானதை மட்டும் பார்ப்பதற்கும், கெட்டதைப் பார்க்காமல் இருப்பதற்கும் அல்லவா ! ஆகையால், நாம் வேத சந்தேசங்களைச் சிரவணம் செய்து மேன்மை அடைவோமாக.

# 10. இரண்டுக்கும் மனதே காரணம்

மனம் மிக அற்புதமான கருவி. இதை எந்தப் பிரமாணங்களினாலும் அறியமுடியாது. இதற்கு அந்தக்கரணம், (உள்ளிருக்கும் கருவி) என்றும் பெயர். நம் மனதில் இருப்பதை நாமே அறிய முடியாமல் இருக்கும் பொழுது பிறர் மனதை எவ்வாறு அறிய முடியும் ?

மனம் ஒரு சிரேஷ்டமான சம்பத்து. மனிதனின் வாழ்க்கையை நியமனம் செய்வதும், சரீரம் மற்றும் இந்திரியங்கள் செயல் படுவதும், அல்லது செயலற்று இருப்பதும் மனதினாலே தான்.

மனிதர்களுக்கு உண்டாகும் சுக துக்கங்கள், விவேக அவிவேகங்கள், சம்சாரம் சந்நியாசம், ராகத்வேஷம், சாந்தி அசாந்தி மற்றும் ஆரோக்யம் நோய் எல்லாவற்றுக்கும் மனமே மூலகாரணம். அதேபோல் மனிதனின் பந்தனத்திற்கும் முக்திக்கும் மனம் தான் காரணமாகிறது. **மன ஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:.** ராவணனின் அகங்காரத்திற்கும், ராமனின் சம நிலைக்கும், மனம் தான் காரணம். துரியோதனனின் பேராசைக் கும், தர்மராஜனின் தியாகத்திற்கும் மனம் தான் காரணம். ஆகவே ஒரு மனிதன் மேன்மையான நிலையை அடைவதற்கும் அல்லது நாசமாவதற்கும் மனமே காரணம்.

இத்தகைய கட்டுப்பாடுகள் இல்லாத மனதிற்குச் சரியான பயிற்சியளித்துப் பக்குவப்படுத்த வேண்டும். ஆத்யாத்மிக சாதனைகளினாலும் சாத்வீக ஆகாரங்களினாலும், சுத்த ஆசார விசாரங்களினாலும், சஞ்சலமான மனதை நல்வழிப் படுத்தினால் அதே மனமே மனிதனைக் காப்பாற்றி உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்கிறது. மனதை அதன் போக்கில் விட்டு விட்டால் தானும் கெட்டு பிறரையும் கெட்ட வழிகளில் செலுத்தி விடும்.

The uncultured, uneducated, unspiritualised MIND becomes Mischievous, Industrious, Notorious and Dangerous; This same **MIND** when spiritually refined becomes **M**oral, **I**ntrovert, **N**oble and **D**ivine. வேதோபநிஷத்துக்களில் கூறியிருக்கும் சந்தேசங்களை அநுஷ்டானம் செய்தும், சுத்தமான மனதுடையவர்களாய் எல்லோருக்கும் நன்மையையே செய்வோம்.

# 11. மாணவர்களின் மூன்று இலட்சணங்கள்

ஒரு மனிதனின் வாழ்க்கையில் மாணவப் பருவம் ஒரு பொன்னான காலம் என்று கூறலாம். ஞானத்தைப் பெறுவதற்கும், புலனடக்கம் அடைவதற்கும், ஆதர்ச வாழ்க்கை வாழ்வதற்கும் மாணவப் பருவமே முக்கியமான காலம் ஆகும். ஒரு மாணவன் தன் இலட்சியங்களைக் காப்பாற்றிக் கொண்டு வந்தால் அவன் வாழ்நாள் முழுவதும் சுகமாகவும், சந்தோஷமாகவும், வாழமுடியும் அல்லவா? சரி, வித்யார்த்தியின் குறிக்கோள் எவ்வாறு இருக்க வேண்டும்? எப்படி இருந்தால் இலட்சிய மாணவனாகக் கருதப்படு கிறான்? வித்யார்த்தி என்றால் வித்யா + அர்த்தி: = வித்யையை நாடுபவன் என்று பொருள். ஞானத்தை சம்பாதிப்பதே அவன் இலட்சியமாக இருக்கவேண்டும். அக்காலத்தில் அரசியல் போன்ற விவகாரங்களில் ஈடுபடக்கூடாது.

ஜகத்குருவாகிய கிருஷ்ண பரமாத்மா மாணவர்களுக்கு நன்மை தரக்கூடிய ஒரு உபதேசத்தைக் கூறியுள்ளார்:

**ச்ரத்தாவான் லபதே ஜ்ஞானம் தத்பர: ஸம்யதேந்த்ரிய:।**
**ஜ்ஞானம் லப்த்வா பராம் சாந்திம் அசிரேணாதிகச்சதி॥**

கீதை 4-39

இதன் பொருள்: சிரத்தையுள்ளவனும், இலட்சியத்திலேயே தீவிரமாக இருப்பவனும், புலனடக்கம் பெற்றவனும், வித்யையை அடைகிறான். அத்தகையவனே ஞானம், சாந்தி மற்றும் ஆனந்தத்தைப் பெறுகிறான். ஒரு இலட்சிய மாணவனுக்கு ஸ்ரீ கிருஷ்ணர் மூன்று முக்கியமான கடமைகளை விளக்குகிறார்:

1. **சிரத்தையுள்ளவனாக இருக்கவேண்டும்:** குருவின் சொற்களில் பூரண பக்தி, கௌரவம், நம்பிக்கை வைக்க வேண்டும்.

2. **தத்பரனாக வேண்டும்:** தன் இலட்சியத்திலேயே தீவிரமாய் இருந்து ஏகாக்கிரதையுடன் கல்வி கற்கவேண்டும்.

3. **புலனடக்கம் உள்ளவன் ஆகவேண்டும்:** கீழான நடத்தை களைக் கைவிட்டு, குருபக்தி மற்றும் ஏகாக்கிரதையுடன் கல்வி கற்றல். இத்தகைய மாணவர்கள் நாட்டுக்கே சாந்தி, சந்தோஷம் அளிப்பது நிச்சயம்.

# 12. சத்குருவின் அனுக்கிரகம்

மனித வாழ்வில் குருவின் ஸ்தானம் மிகவும் உயர்வானது. சத்குரு, தாய், தந்தை, தெய்வம் இவர்களை நம் பாரத நாட்டில் மிகுந்த பக்தியுடன் போற்றுவது வழக்கம். இவர்களில் குருவிற்கு மிக உயர்ந்த இடத்தை அளித்துள்ளனர் .

குரு என்றால் அஞ்ஞானம் என்ற காரிருளை நாசம் செய்யக் கூடியவர் என்று பொருள். அஞ்ஞானம் தான் மனிதனுக்குப் பெரிய எதிரி. மனிதனுக்கு ஏற்படும் எல்லா துன்பங்களுக்கும், அனர்த்தங் களுக்கும் அஞ்ஞானமே மூல காரணம். இத்தகைய அஞ்ஞா னத்தை அழிப்பவர் தான் சத்குரு. ஞானமே மனிதனின் பெரிய சம்பத்து. இதனாலேயே மனித வாழ்வு முழுமையடைகிறது. ஞான மில்லாத மனிதனை ஒரு மிருகத்திற்கு ஒப்பிட்டுக் கூறுகின்றனர். 'ஜ்ஞானேன ஹீனா: பசுபி: ஸமானா:' என்பது சான்றோர் மொழி.

இன்றைய காலத்தில் எல்லோரும் குரு ஆவதற்கே ஆசைப்படு கின்றனர். யாரும் சிஷ்யனாக விரும்புவதில்லை. ஒருவன் தனக்கே அறிவு இல்லாமல் இருந்தால் பிறருக்கு எவ்வாறு கற்பிக்கமுடியும் ? எவ்வளவு அறிவு பெற்றாலும் தன்னை ஒரு மாணவனாக எண்ணி அடக்கமாக இருப்பவனே உண்மையான குரு.

**குரவோ பஹவ: ஸந்தி சிஷ்யவித்தாபஹாரகா:।**
**குரவோ விரலா: ஸந்தி சிஷ்யஹ்ருத் தாபஹாரகா:॥**

சிஷ்யனின் பணத்தை அபகரிக்கும் குருவை விட சிஷ்யனின் மனதில் உண்டாகும் துன்பங்களை அழிப்பவனே சத்குரு.

சிஷ்யன் எவ்வாறு குருவை அணுகவேண்டும் என்பதற்கு கீதையின் (4-34) உபதேசத்தைப் பார்ப்போம்

**தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரச்னேன ஸேவயா।**
**உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞானம் ஜ்ஞானின: தத்த்வதர்சின:॥**

சிஷ்யனாகியவன் குருவைப் பணிந்து, அவருக்குச் சேவை செய்து கொண்டு தன் சந்தேகங்களை நிவர்த்தி செய்து வந்தால், அத்தகையவனுக்கு குருவானவர் அன்புடன் ஆத்ம ஞானத்தை உபதேசிக்கிறார். இதுவே சத்குருவின் அனுக்கிரகம் ஆகும்.

# 13. தூய உணவின் மகிமை!

நாம் உண்ணக்கூடிய உணவினால் தேகம், இந்திரியங்கள், பிராணன், மனம், புத்தி இவைகளில் அற்புதமான பரிணாமம் உண்டாகிறது. முன் காலத்தில் மகரிஷிகள் காய், கிழங்கு, கீரைகள் முதலானவற்றை உட்கொண்டு நல்ல ஆரோக்கியத்துடன் மேதாவி களாகவும், தியாகிகளாகவும், நீண்ட ஆயுளுடனும் வாழ்ந்து வந்தனர். உண்ணும் உணவின் மகிமை அளவிட முடியாதது.

இன்றைய நாகரீக உலகில் நம் வாழ்க்கை எப்படி இருக்கிறது? நாற்பது வயதிலேயே மனிதனுக்கு இரத்தக் கொதிப்பு, நீரிழிவு நோய் என்று எத்தனை விதமான நோய்கள் அவனை வந்து சூழ்ந்து விடுகின்றன. ஒரு கருவானது தாயின் வயிற்றில் வளரும்போதே அதன் நலனுக்காக எத்தனை ஊசி, மருந்து, டானிக்கு என்று தேவைப்படுகின்றன. இன்றைய மனிதனுக்கு எப்பொழுதும் டென்ஷன், கவலைகள், யோசனைகள் தான் உள்ளன.

இதற்கு என்ன காரணம்? இன்று நம் உணவுப்பொருட்கள் இரசாயன உரங்களினாலேயே விளைகின்றன. அதனால் அரிசி, கோதுமை, காய்கறிகள், பழங்கள் எல்லாம் சத்தில்லாமல் இருக் கின்றன. உணவு சுத்தமாக இருந்தால் மனதும் சுத்தமாகிறது. உணவு அசுத்தமானால் மனதும் அசுத்தமாகி விடும்.

சாந்தோக்கிய உபநிஷத்தின் இந்த மந்திரத்தைப் பார்ப்போமாக: **ஆஹாரசுத்தௌ ஸத்த்வசுத்தி: ஸத்த்வசுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி: ஸ்ம்ருதிலம்பே ஸர்வக்ரந்தீனாம் விப்ரமோக்ஷ:।** இதன் தாத்பர்யம்: உணவு சுத்தமானால் மனமும் சுத்தமாகிறது; மனம் சுத்தமானால் ஆத்மஞானம் உண்டாகிறது; ஆத்மஞானத்தி லிருந்து பூர்வ ஜன்ம வாசனைகள் அழிகின்றன.

இங்கு உணவு என்றால் இந்திரியங்களால் அனுபவிக்கும் சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், மற்றும் கந்தங்கள் ஆகும். 'ஹிதபுக், ரிதபுக், மிதபுக்' ஆகி இருப்பவனுக்கு எந்த நோயும் உண்டாகாது. **ஹிதபுக்** உத்தமமான உணவை உண்பவன். **ரிதபுக்** சரியான வேளையில் உண்பவன். **மிதபுக்** அளவாக உண்பவன். இவ்வாறு உண்பவன் ஆரோக்கியமும், புத்தி சாமர்த்தியமும் நற்பண்புகளும் உள்ளவனாக வாழ்கிறான்.

# 14. இலட்சிய தம்பதிகள்

ஒரு ஆணுக்கும் பெண்ணிற்கும் அக்னி சாட்சியாக, பெரியோர்கள் முன்னிலையில் நடைபெறும் புனிதமான நிகழ்ச்சியே விவாகம். விவாகமான இருவரும் கணவன் மனைவியாகி அன்னி யோன்யமாகி வாழ்க்கை முழுவதும் சுக துக்கங்களில் பங்கேற்று வாழ வேண்டும். எந்த சூழ்நிலையிலும் இவர்களுக்குள் பிரிவு நேரக்கூடாது. இதுவே நம் ஆதர்ச (இலட்சிய) பாரத சம்பிரதாயம்.

'தர்மே ச, அர்த்தே ச காமே ச நாதிசராமி', ஒருநாளும் நான் என் பத்னியை விட்டு விட்டு, தர்மம், அர்த்தம், காமத்தை அனுஷ்டானம் செய்ய மாட்டேன் என்று அக்னிசாட்சியாக சத்தியம் செய்த பிறகு, பதியை பத்னியோ, பத்னியை பதியோ விலக்கக் கூடாது. பதி பத்னியின் சம்பந்தம் வெறும் காம போகங்களுக்காக அல்ல. நல்ல சந்ததிகளை உருவாக்கி தன் வம்சத்திற்கும், சமுதாயத்திற்கும் சேவை செய்யவேண்டும் என்பதற்காகவேயாகும்.

கணவன் மனைவி எப்பொழுதும் அன்புடனும், ஒற்றுமை யுடனும் வாழ்க்கை நடத்தவேண்டும். இவர்களுக்குள் யார் பெரியவர் யார் சிறியவர் என்ற பாவனை வரக்கூடாது. இரண்டு சக்கரங்கள் உள்ள வண்டிக்கு இரண்டும் முக்கியம் தான். ஒரு சைக்கிளுக்கு முன் சக்கரம் முக்கியமா ? பின் சக்கரம் முக்கியமா ? இரண்டும் முக்கியமல்லவா ?

வாழ்க்கையில் சுக துக்கம் ஏற்படுவது சகஜம். இதை மனதில் வைத்துக் கொண்டு வெறுப்பையும் விரோதத்தையும் வளர்த்துக் கொள்வது தவறு. சுக துக்கங்கள் காற்றைப்போல் வந்து போய் கொண்டிருக்கின்றன. ஆனால் கணவன் மனைவியரிடம் அன்பு, அன்னியோன்யம், முதலியவை நிரந்தரமாக இருக்க வேண்டும்.

பொன் மானுக்கு ஆசைப் பட்டதால் சீதை தானும் கஷ்டத்தை அனுபவித்து, ஸ்ரீராமனுக்கும் துக்கத்தைக் கொடுத்தாள். ஸ்ரீராமன் தந்தையின் வார்த்தைக்குக் கீழ்படிந்து தானும் காட்டிற்குச் சென்று மனைவியான சீதைக்கும் துக்கத்தைக் கொடுத்தான். ஆனாலும் அவர்கள் இருவரும் எவ்வளவு அன்புடன் வாழ்ந்தார்கள். இவர்கள் அல்லவா இலட்சிய தம்பதிகள். இன்றும் தம்பதியர்கள் இலட்சிய வாழ்க்கையை கடைபிடித்து ஆனந்தமாக வாழலாம்.

# 15. குருவின் பெருமை

நம் பாரதீய சம்ஸ்க்ருதியில் தந்தைக்கும் குருவிற்கும் ஒரு உயர்ந்த இடத்தைக் கொடுத்துள்ளனர். தாய் தந்தையின் அனுக்கிரகத்தினால் தான் நமக்கு இந்த பவித்ரமான மனித சரீரம் ஏற்பட்டுள்ளது. தாய் தந்தையின் கடனை யாரும் முழுதும் தீர்க்க முடியாது. ஆகையால் தான் வேதங்களில் **மாத்ருதேவோ பவ। பித்ரு தேவோ பவ**। என்று தாய் தந்தையரை கடவுளாக வணங்கவேண் டும் என்றும் உபதேசித்துள்ளது. தாய் தந்தைகளை சந்தோஷத் துடனும், சிரத்தையுடனும் பூஜித்துக் கௌரவிக்க வேண்டும்.

சத்குருவின் நிலை மிகவும் சிறப்பானது. நம்மைப் பரம கருணையுடன் சரியான சன்மார்க்கத்தில் நடத்திச் செல்லக்கூடி யவரே குரு. நம்முள்ளில் இருக்கும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யங்களை நாசம் செய்து நம்மை புனிதமாக்கு பவரே குரு. **மனிதனுக்குக் குறிக்கோளையும் மோட்சத்தின் மார்க்கத்தையும் தெரிவிப்பவரே குரு.**

தந்தை நம் சரீர பந்தனத்திற்குக் காரணமாகிறார். ஆனால் குருவோ தேக பந்தனத்திலிருந்து விடுவிக்கிறார். அகங்காரம் மமகார ரூபமாகிய இந்த சம்சாரத்தில் விழவைப்பவன் தந்தை யானால், ஆத்மஞான உபதேசத்தின் மூலம் நம்மை இந்த சம்சார சாகரத்தைத் தாண்ட வைப்பவரே குரு. குருவிற்கு மேலான ஒருவர் இந்த உலகம் முழுவதிலும் இல்லை. '**ந குரோரதிகம் கிஞ்சித்**'. ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர் முதலான அவதார புருஷர்களும் தங்கள் குருவான விச்வாமித்ரர், சாந்தீபனீ ஆகியவர்களுக்குச் சேவை செய்து குருவின் பெருமையை அறிவுறுத்தியுள்ளனர்.

ப்ரச்நோபநிஷத்தில் வரும் ஒரு கதை: ஆறு சிஷ்யர்கள் **பிப்ப லாத**ர் என்ற குருவை அணுகி அவரிடமிருந்து ஆத்ம ஞானத்தை அடைகின்றனர். கிருதார்த்த ராகிய அந்த ஆறு சிஷ்யர்களும் மிகவும் நன்றியுடன் குருவை **த்வம் ஹி ந: பிதா யோ஽ஸ்மாகம் அவித்யாயா: பரம் பாரம் தாரயஸி**, 'நீர் தான் எங்களுக்கு உண்மை யான தந்தை. ஏன் என்றால் நீர் தான் எம்மை அறியாமையாகிய கடலைக் கருணையுடன் தாண்ட வைத்துள்ளீர்' என்று போற்றிப் புகழ்ந்தார்கள். பார்த்தீர்களா குருவின் மகிமையை ?

# 16. சத்சங்கத்தின் மகிமை

இவ்வுலகில் அநேக வித்யைகள் மற்றும் கலைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும் அதற்கே உரித்தான மகிமை, சக்தி, மதிப்பு உள்ளன. ஆனால் இக்காலத்தில் சித்திகள் கைவரப் பெற்ற புருஷர்கள் பலர் நம்மிடையே இருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் சித்திகளால் அரசியல் வாதிகள், செல்வந்தர்கள், அறிஞர்கள், என்ற எல்லோரையும் தங்கள் வசப்படுத்தி விடுகின்றனர். பகுத்தறிவு வாதிகளும் இவர்களிடம் மயங்கி அடிமையாகி விடுகின்றனர். இத்தகையவரை மக்கள் மகா தபஸ்விகள், மகா யோகியர் எனக் கொண்டாடி, பூஜித்தும் வருகின்றார்கள். இதுவும் நல்லதே.

இத்தகையவரைப் பற்றியுள்ள விவாதம் நமக்குத் தேவையில்லை. சத் சங்கத்தின் மகிமையை மட்டும் இங்கு பார்க்கலாம். சத் சங்கம் என்றால் என்ன ? சத்புருஷருடன், சாது ஜனங்களுடன் சேர்ந்து இருத்தலே சத்சங்கம். சத்புருஷர் என்றால் பகவத்பக்தர்கள், சத்திய சந்தர்கள், சத்தியத்திலேயே நிலைத்திருப்பவர்கள். இவர்கள் இயல்பான எளிமையான வாழ்க்கை நடத்துபவர்கள். ஆடம்பரமற்ற சகஜமான, சாத்வீகமான சுபாவமுடையவர்கள். **இப்படிப் பட்டவர்கள் சகவாசமே சத் சங்கம்.**

இந்த சத் சங்கத்தினால் நம் வாழ்க்கை முற்றும் மாறி விடுகிறது. நம்முள்ளில் இருக்கும் எல்லா பாவங்களும் நம்மை அறியாமலே நாசமாகி விடுகின்றன. வால்மீகி மகரிஷியின் பூர்வ கதையை இங்கு பார்ப்போம். வால்மீகி இளம் வயதில் இரத்னாகரன் என்ற பெயருடைய ஒரு வேடனாக இருந்தான். மனிதர்களை கொன்று வழிப்பறி செய்தும், கொள்ளை யடித்தும் வாழ்க்கை நடத்தி வந்தான். ரிஷிகள் சகவாசத்தினால் 'மரா', 'ராம' என்ற நாம உபதேசத்தைப் பெற்று சத்சங்கத்தினால் வினைகள் நீங்கி மகாத்மா ஆகி விடுகிறார். சத்சங்கம் ஒருவரை வெகு எளிதாக நல்ல மார்க்கத்தில் அழைத்துச் செல்கிறது. துஷ்டர்களையும் திருடர்களையும் சத்சங்கம் சத்புருஷர்களாக மாற்றி விடுவதற்கு வால்மீகியின் வாழ்க்கையே சான்று. சத்சங்கம் என்பது உண்மையாக ஓர் அற்புத வித்யை அல்லவா ? **ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்** என்று சத் ஸங்கத்தின் மகிமையை ஸ்ரீ சங்கரரும் கூறியுள்ளார்.

# 17. வார்த்தைகளின் மந்திர சக்தி

“மாசறு பொன்னே’ மணியே முத்தே” என்றெல்லாம் ஒருவரின் பேச்சைப் புகழ்வது உலக வழக்கு. புழு, பூச்சி, பறவை மற்றும் புலி சிங்கம் யானை போன்ற விலங்குகளுக்கு பேசும் திறன் இல்லை. ஆனால் இறைவன் மனிதனுக்கு மட்டுமே பேசும் சக்தியை அளித் துள்ளான். பேச்சினால் நாம் எல்லோரையும் கவர முடியும். எதையும் சாதிக்கலாம். இந்த உலகத்தையே சொர்க்கமாக மாற்றலாம். இராமாயணம், மகாபாரதம், பாகவதம், புராணங்கள், பகவத் கீதை மற்றும் வேத சாத்திரங்கள் எல்லாம் வார்த்தைகளே அல்லவா ?

இந்தப் பேச்சு சில சமயம் நன்மை பயப்பதாகவும் சில சமயம் பெரிய தீங்கு விளைவிப்பதாகவும் இருக்கிறது. நன்கு ஆராயாமல், அவசரத்திலும், கோபத்திலும் கூறிவிடும் வார்த்தைகள் பெரிய அனர்த்தத்தை ஏற்படுத்தி விடுகின்றன. ஆத்திரத்தில் பேசும் வார்த்தைகள் ஒருவரின் மரணத்திற்கே காரணமாகிவிடும். திருவள்ளுவரும் இதையே, **தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு** என்று கூறியுள்ளார்.

அதேபோல் எத்தகைய கொடியவனையும் அன்பான வார்த்தை களால் நல்லவனாக மாற்றிவிடவும் முடியும். அச்சமயம் நமக்கு அடக்கமும் விவேகமும் தேவை. ஒருவனது சம்ஸ்காரத்தையும், யோக்கியதையும் அவன் பேச்சிலிருந்தே அறிய முடியும்.

ஒருவருக்கு இனிமையாகப் பேசுவதற்கு படிப்பு, குலம் போன்ற எந்த தகுதியும் தேவையில்லை. அன்பான வார்த்தைகளின் சக்தி அளவிடமுடியாதது.

**ப்ரியவாக்யப்ரதானேன ஸர்வே துஷ்யந்தி ஜந்தவ:।**
**தஸ்மாத் ததேவ வக்தவ்யம் வசனே கா தரித்ரதா ?**

பிரியமான பேச்சினால் எல்லா மனிதர்களும் சந்தோஷம் அடைகின்றார்கள். பிரியமான வார்த்தைகளுக்குப் பஞ்சம் உண்டா ? நம் வார்த்தைகள் முத்து மாணிக்கம் போல் உயர்வான தாகவும், நம் பேச்சே மந்திரமாகவும் எப்பொழுதும் எல்லோருக்கும் நன்மையையே தருவதாகவும் அமையட்டும்.

# 18. ஆரோக்கியத்திற்கு மூன்று வழிகள்

ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் தேவையானது ஆரோக்கியமே. ஆரோக்கியம் இல்லாவிட்டால் நிம்மதியோ சுகமோ இருப்பதில்லை. இதையே நம் முன்னோர்கள் "நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்" என்று கூறினர். ஆங்கிலத்திலும் இதை Health is Wealth என்பர்.

நாம் எல்லோரும் மிகவும் ஆசைப்படுவதும் ஆனால் எளிதில் யாருக்கும் கிடைக்காத சௌபாக்கியம் ஆரோக் கியம் தான். இன்று ஒவ்வொரு மனிதனும் தன் வருமானத்தில் முப்பது சதவிகிதம் மருந்து மாத்திரைகளுக்குச் செலவழிப்பது மிகவும் சாதாரணம் ஆகி விட்டது. இந்த நிலை நீடித்தால் நம் வருங்கால சந்ததிகள் கதி தான் என்ன ? மிகவும் பரிதாபமானதே! வருங்காலத்தில் உண்ணும் உணவை விட மருந்து மாத்திரைகளே அதிகமாகலாம். இது ஒரு நல்ல அறிகுறி அல்ல. இது நாகரீக வாழ்வின் தலைவிதி!

ஆரோக்கியத்திற்காக நம் மகரிஷிகள் செய்துள்ள உபதேசங்கள் என்ன ? ஆரோக்கிய பிராப்த்திக்கு ஸ்ரீகிருஷ்ணர் கூறும் மூன்று உபதேசங்களைப் பார்ப்போம் (கீதை 6-17).

**யுக்தாஹார விஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு ।**
**யுக்தஸ்வப்னாவபோதஸ்ய யோகோ பவதி துக்கஹா ॥**

1. தனக்குத் தேவையான அளவு சாத்வீகமான ஆகாரத்தை உட்கொள்ள வேண்டும். குறைவாகவோ அதிகமாகவோ உண்ணக் கூடாது.
2. தினமும் அளவான உடற்பயிற்சி, பிராணாயாமம், யோகாசனங்கள் தவறாமல் செய்யவேண்டும். சக்திக்கு மீறி உடலை வருத்த வேண்டாம்.
3. தினமும் ஆறு மணி நேரமாவது நித்திரை செய்ய வேண்டும். இரவில் தூங்காமல் உழைப்பவர்களுக்கு ஆரோக்கியம் கெட்டு விடும்.

இந்த மூன்று வழிமுறைகளை அனுசரித்து ஆரோக்கியம் உள்ளவர்களாக வாழ்வோம்.

# 19. உலகத்திற்கான வேதப் பிரார்த்தனைகள்

நாம் இறைவனிடம் செய்யும் பிரார்த்தனைகள் இரண்டு வகையானவை. முதலாவது, ஒருவன் தனது சுக சாந்திக்காகவும், நலத்திற்காகவும் செய்யும் தனிப் பிரார்த்தனை. மற்றொன்று எல்லோருக்குமாக இந்த முழு உலகின் நன்மைக்காக எல்லோருமாகச் சேர்ந்து செய்யும் கூட்டுப் பிரார்த்தனை. தனிப் பிரார்த்தனையை விட கூட்டுப் பிரார்த்தனைக்கு மகத்துவம் அதிகம். உலகிற்காகப் பிரார்த்தனை செய்யும்பொழுது நம் மனதில் உலகமக்கள் அனைவ ரிடமும் நட்பு, அன்பு, பரிவு, பாசம், போன்ற நல்ல உணர்வுகள் மேலோங்குகின்றன. வேதோபநிஷத்துகளில் இத்தகைய கூட்டுப் பிரார்த்தனைகள் அதிக அளவில் உள்ளன. கீழ்வரும் சாந்தி மந்திரத்தைப் பார்ப்போம்.

**ஓம்॥ பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா:। பத்ரம் பச்யேம அக்ஷபிர்யஜத்ரா:। ஸ்திரைரங்கை: துஷ்டுவாகும்ஸஸ்தனூபி:। வ்யசேம தேவஹிதம் யதாயு:। ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தச்ரவா:। ஸ்வஸ்தி ந: பூஷா விச்வவேதா:। ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷயோ அரிஷ்ட னேமி:। ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர்ததாது॥ ॥ ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:॥**

“ஓ பரமாத்மனே! தேவர்களே! நாங்கள் எப்பொழுதும் நல்ல விஷயங்களையே கேட்கும்படி ஆகட்டும். கண்களால் நல்ல காட்சிகளையே பார்க்கும் படி ஆகட்டும். ஆரோக்கியமும் உறுதியும் படைத்த சரீரம் மற்றும் இந்திரியங்களால் நாங்கள் உங்களைத் துதிக்கும்படி ஆகட்டும். இறைவன் கொடுத்திருக்கும் ஆயுள் முடியும் வரை சந்தோஷமுடன் வாழவேண்டும். நமக்கு இந்திரன், எல்லாம் வல்ல சூரியதேவன், தீமையை அழிக்கும் கருடதேவன், பிரகஸ்பதி—முதலாகிய தேவர்களும் நன்மையையே செய்யட்டும்.

இந்த மந்திரத்தில் தன் ஒருவனுக்காகப் பிரார்த்திக்காமல், அனைவரின் நன்மைக்காக பிரார்த்தனை செய்யப் பட்டுள்ளது. ‘பச்யேம’, ‘துஷ்டுவாம்ஸ:’, ‘வ்யசேம’ என்று பன்மையில் இறைவனை வேண்டுகிறோம். இத்தகைய உலகிற்கான பிரார்த்தனையால் உலகம் முழுவதும் அன்பு, பாசம், பரிவு, நட்பு அதிகரிக்கும். இதில் சந்தேகமில்லை.

# 20. அவனில்லாமல் எதுவும் இல்லை

பரந்து விரிந்த இவ்வுலகில் ஒவ்வொரு பொருளும் இறைவனின் படைப்பே. ஒவ்வொரு பிராணியும் இறைவனின் சக்தியே. இந்த உலகத்தில் பயனற்றது என்று எதுவும் இல்லை. இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு சக்தியைக் கொடுத்துள்ளான். ஒருவன் சக்திசாலியாக இருக்கிறான்; மற்றொருவன் புத்திசாலியாக இருக்கிறான்; ஒருவன் மூடனாக இருந்தாலும் சத்திய சொருபனாக மதிக்கப் படுகிறான்; கல்வி அறிவு இல்லாதவன் வாக்கு வன்மை உடையவனாக இருக்கிறான்.

மனிதன் தன்னிடமுள்ள இந்த விசேஷ சக்தியை உணரும் போது அகங்காரம், தற்பெருமை, கர்வம், என்ற குணங்களும் வரக்கூடியது சகஜமே. இது ஒரு பெரிய வியாதியல்லவா? சந்நியாசி, அறிஞன், கலைஞன், அத்யாத்ம சாதகன்—எவரும் இந்த வியாதியிலிருந்து தப்ப முடியாது. உண்மையில் சாதாரண மனிதர்களைவிட கௌரவமிக்க சாதகர்களிடையே இந்த நோய் அதிகம் உள்ளது.

‘**அவனன்றி ஓரணுவும் அசையாது**’ என்ற பேருண்மையை நாம் உணரவேண்டும். இறைவன் அருளால் தான் இந்த உலகம் நிலைபெற்றுள்ளது. நாம் அனைவரும் அவன் கைப்பொம்மைகளே. அவனே சூத்ரதாரி. இறைவனின் சங்கல்பத்தை அனுசரித்தே ஒவ்வொரு செயலும் ஒழுங்கு முறையோடு நடக்கிறது. நம் சக்தியால் அல்ல. இதை நாம் உணர வேண்டும்.

இதற்குக் கேனோபநிஷத்தில் ஒரு கதையுள்ளது. ஒரு சமயம் தேவர்கள் மற்றும் அசுரர்களிடையே யுத்தம் நடந்ததாம். அதில் அசுரர்களே வென்று விடுகிறார்கள். இதைப் பார்த்த இறைவன் தேவதைகளுக்கு மீண்டும் சக்தியைக் கொடுக்கிறார். பின்னர் தேவர்கள் அசுரர்களை வெல்லுகிறார்கள். ஆனால், தேவதைகள் அகங்காரமும், தற் பெருமையும் உள்ளவர்களாய் இறைவனை மறந்து தங்களுக்குள் யார் பெரியவன் என்று சண்டை போட ஆரம்பித்தார்கள். தேவர்களுக்குப் புத்தி கற்பிக்க எண்ணி இறைவன் அவர்களுக்கு அளித்த திவ்ய சக்தியை மீண்டும் எடுத்துக் கொண்டு விடுகிறான். இறைவனின் மகிமையை உணர்ந்த தேவர்கள் ‘**அவனன்றி எதுவும் இல்லை**’ என்பதை உணருகிறார்கள்.

# 21. மனம் ஒரு குரங்கு

சஞ்சலமானதும், பண்படுத்தப் படாததுமாகிய மனமே மனிதர்கள் வாழ்க்கையின் துக்கங்களுக்குக் காரணமாக உள்ளது. "**க்ஷணம் சித்தம் க்ஷணம் வித்தம்**" என்னும் பழமொழி எவ்வளவு சத்தியமானது! எந்த தபஸ்வியையும் மண்ணைக் கவ்வச் செய்யும் ஒரே ஒரு எதிரி இந்த மனம் தான். புத்தி, சித்தம், அகங்காரம் அந்தகரணம் எல்லாம் மனதைக் குறிக்கும் சொற்கள் ஆகும்.

அர்ஜுனனை போன்ற மாவீரனையும் தன் கடமையைச் செய்ய முடியாமல், குழப்பத்தில் ஆழ்த்தியது மனம் என்ற எதிரி தான். குருக்ஷேத்திர யுத்தத்தில் அர்ஜுனன் கண்ணனிடம் மிகவும் மனம் தளர்ந்தவனாய், கீழ்வருமாறு கூறுகிறான் (கீதை 6-34).

**சஞ்சலம் ஹி மன: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம் ।**
**தஸ்யாஹம் நிக்ரஹம் மன்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் ॥**

"ஓ, பரமாத்மனே, இந்த மனம் அலையும் தன்மையுடையது. மிகவும் கடினமானது மற்றும் சக்திவாய்ந்தது. இதை தடை செய்வது புயல் காற்றைத் தடை செய்வது போன்றது ஆகும். இத்தகைய குரங்கு போன்ற மனதை வெல்வது உலகத்தையே வெல்வதைப் போல் கடினமானது".

மனோ நிக்கிரகத்திற்கும், மனப்பிணியை நீக்கவும் கீதாசார்ய னின் எளிமையான உபாயத்தைப் பார்ப்போம் (கீதை 6-35).

**அஸம்சயம் மஹாபாஹோ மனோ துர்நிக்ரஹம் சலம் ।**
**'அப்யாஸேன' து கௌந்தேய 'வைராக்யேண' ச க்ருஹ்யதே ॥**

ஓ பராக்கிரமசாலியான அர்ஜுனனே! சஞ்சலமான மனதைக் கட்டுப் படுத்துவது சுலபமில்லை. ஆனால் உபாயத்தினால் கட்டுப் படுத்தமுடியும். அந்த உபாயம் எது என்றால் புலனடக்கம், மற்றும் வைராக்கியம். ஒவ்வொரு கணமும் படிப்படியாக, விடாமுயற்சி செய்தால் மனதைக் கட்டுப்படுத்த முடியும். வைராக்யத்தாலும், சத்சங்கம், ஜபம், தவம் முதலிய சாதனைகளினாலும் மனதைச் சுலபமாக வெல்லலாம். மனக் குரங்கை அடக்கி விட்டோமானால் நம்முள் இருக்கும் ஆனந்தம் என்ற பெரும் செல்வத்தை அடைந்த வராவோம்!

# 22. பெண்கள் அனைவரும் அன்னைகளே!

உலகம் முழுவதும் காணப்படும் எண்ணற்ற கலாசாரங்களில் நம் பாரத கலாசாரமே மிகவும் உன்னதமானதாகவும், பவித்ரமான தாகவும் போற்றப்படுகிறது. நம் நாட்டில் பெண்களுக்கு மிக உயர்ந்த இடத்தைக் கொடுத்துள்ளோம். "**பெண்கள் அனைவரும் அன்னைகளே**" என்பதே நம் பண்பாடு. ஒரு ஆணின் கண் எதிரே ஒரு அழகான பெண் வந்தால் அவனுக்குக் காம பாவம் தோன்றுவது இயற்கையே. ஆனால், நம் பாரத பண்பாட்டிற்கு இது விரோதமானது. கீழ்தரமான செயலாக எண்ணப்படுகிறது. பிற பெண்களைப் பார்க்கும் போது அவன் மனதில் தாயைப் பார்ப்பது போன்ற சிந்தனையே இயல்பாக ஏற்படவேண்டும் என்பதே நம் கலாசாரம்.

**மாத்ருவத் பரதாரேஷு பரத்ரவ்யேஷு லோஷ்டவத்।**
**ஆத்மவத் ஸர்வபூதானி ய: பச்யதி ஸ பச்யதி॥**

பிற பெண்களைத் தாயைப் போலவும், பிறர் பொருட்களை மண்ணைப் போலவும், எல்லோரையும் தன்னைப் போலவும் காணக் கூடியவனே உண்மையான பாரதத் தாயின் மகன் ஆவான். இவனே விவேகியும் ஆவான்.

இதற்கு ஒரு உதாரணம்: இது இராமாயணத்தில் வரும் ஒரு நிகழ்ச்சி. சீதாதேவியை கொடிய அரக்கனாகிய இராவணன் கவர்ந்து கொண்டு வான் வழியாக செல்கிறான். சீதாதேவி தன் ஆபரணங்களைக் கழற்றி தன் சேலையின் தலைப்பில் கட்டி பூமியில் வீசியெறிகிறாள். இதைக் கண்டெடுத்த சுக்ரீவன் லக்ஷ்மணனிடம் 'சீதையின் ஆபரணங்கள் இதுவா பார்' என்று கேட்க லக்ஷ்மணன் இவ்வாறு கூறுகிறான்.

**நஹம் ஜானாமி கேயூரே நாஹம் ஜானாமி குண்டலே।**
**நூபுரே த்வபிஜானாமி நித்யம் பாதாபிவந்தனாத்॥**

"இந்தத் தோள் வளைகளோ, குண்டலங்களோ எனக்குப் பரிச்சயமில்லை. ஆனால் இந்த கால் மெட்டி சீதா மாதாவுடையது இது உறுதி. ஏன் எனில் நான் தினமும் சீதாதேவியின் பாதங்களை நமஸ்கரித்து வந்துள்ளேன்" என்று பணிவுடன் கூறுகிறான். இத்தகைய உயர்ந்த பண்பாடே நம் பாரதப் பண்பாடு. அதையே நாமும் என்றும் பின்பற்றி வாழ்வோம்.

# 23. அமிர்தம் போன்ற இரு கனிகள்

வேதாந்த சாஸ்திரங்களில் ‘சம்சாரம்’ என்ற சொல் மிகப் பரவலாகக் காணப்படுகிறது. **சம்சாரம்** என்றால் மீண்டும் மீண்டும் பிறப்பதும், இறப்பதும், சுக துக்கங்கள் அனுபவிப்பதும், சோக மோகம், மான அவமானம், ராகத்துவேஷங்கள் நிறைந்ததும் ஆகும்.

**புனரபி ஜனனம் புனரபி மரணம் புனரபி ஜனனீஜடரே சயனம்।**
**இஹ ஸம்ஸாரே பஹுதுஸ்தாரே க்ருபயாபாரே பாஹி முராரே॥**

என்று ஸ்ரீசங்கரர் ‘சம்சார’த்தின் சொரூபத்தை வர்ணிக்கிறார்.

இந்தச் சம்சாரத்தை ஆழ்கடலுக்கும், அடர்ந்த காட்டிற்கும், இருட்டு மற்றும் மரத்திற்கும் ஒப்பிடும் வழக்கம் வேதாந்தத்தில் உள்ளது. சாஸ்த்திரங்கள் சம்சாரத்தை ஒரு விஷ விருட்சம் என்று வர்ணிக்கின்றன. விஷ விருட்சம் என்றால் விதை, செடி, மரம், அதன் இலைகள், கிளைகள், பூக்கள், காய்கள், கனிகள் முழுவதும் விஷமே. இந்த விஷ விருட்சத்திலிருந்து வரும் காற்றும் விஷமே. ஆனால் என்ன ஆச்சர்யம்! இத்தனை கொடிய விஷ விருட்சத்தில் இரண்டே இரண்டு கனிகள் மட்டும் அமிருதம் போன்று இனிப்பாக இருக்கின்றன. பிறந்ததிலிருந்து இறப்புவரை இந்த சம்சாரத்தில் துக்கமே நிறைந்ததாக உள்ளது. இந்த சம்சார விஷ விருட்சத்திலிருந்து அமிருதம் போன்ற கனிகளை அனுபவிப்பவன் எத்தனை தீரன், விவேகி, புத்திசாலி.

அந்த இரண்டு கனிகள் தான் **ஸுபாஷிதம்** மற்றும் **ஸத்ஸங்கம்**. இந்த இரண்டு கனிகளைத் தவிர மற்றவையெல்லாம் சாரமற்றவை. சம்சாரம் விஷ விருட்சமாகி இருந்தாலும் ஸுபாஷிதம் மற்றும் ஸத்ஸங்கம் என்ற இரு கனிகளுக்காகத் தான் இந்த மரம் பிறந்துள்ளது.

**ஸம்ஸார விஷவ்ருக்ஷஸ்ய த்வே பலே ஹ்யம்ருதோபமே।**
**ஸுபாஷிதரஸாஸ்வாத: ஸங்கதி: ஸுஜனை: ஸஹ॥**

**ஸுபாஷிதம்** என்றால் உத்தமமான உபதேசங்கள். இராமாயணம், மகாபாரதம், பாகவதம், புராணங்கள், வேத சாஸ்த்திர நூல்கள். மற்றும் சத் புருஷர்களின் சங்கம். இதுதான் **ஸத்ஸங்கம்.** இந்த இனிப்பான கனிகளின் ருசியை அனுபவித்துத் தான் உணரமுடியும்.

# 24. சத்தியமே உயர்ந்த தவம்

பேசும் சக்தி மனிதனுக்கு இறைவன் அளித்திருக்கும் அற்புத மான, அதிசயமான சம்பத்து ஆகும். மனித உயிர்களுக்கு மட்டுமே அமைந்துள்ள இந்த வாக் சக்தியின் மகத்துவம் சாதாரண மானதல்ல. இந்த விசேஷ சக்தி மனிதனுக்கு இருப்பதே உண் மையைச் சொல்வதற்காக மட்டுமே. சத்தியமே நம் மூச்சு, பேச்சு, மற்றும் வாழ்க்கையாக இருக்க வேண்டும். கனவிலும் மற்றும் வேடிக்கைக்காகக் கூட பொய் சொல்லக் கூடாது. அப்பொழுது தான் சத்திய சொரூபனாகிய இறைவனின் குழந்தைகள் நாம் என்பது உண்மையாகும்.

ஆனால், பகவானின் மாயையை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்பொழுது எல்லா இடங்களிலும், பொய்யின் அரசாட்சியே நடக்கிறது. அரசாங்கம், கல்விக் கூடங்கள், நீதி மன்றம், உணவகங்கள், கோவில்கள், மடங்கள் என்று எங்கும் பொய்யே தாண்டவமாடுகிறது. இது ஒரு நாட்டின் அல்லது உலகத்தின் முன்னேற்றத்திற்கும் அமைதிக்கும் ஒரு நல்ல அறிகுறி இல்லை. இதைப் பார்த்துத்தான் இறைவனே நம்மிடமிருந்து மறைந்து இருக்கிறானோ என்னவோ! இந்தத் துர்பாக்கியம் நமக்கு இனியும் வேண்டாம். இது இன்றோடு தொலைந்து போகட்டும்.

சத்தியம், சத்திய வசனம், சத்திய வாக்கு, சத்திய நிஷ்டை, சத்திய விரதம்,—இவைகள் எத்தனை உயர்ந்த சொற்கள். இவை பரம்பொருளையே குறிக்கும் வார்த்தைகள் என்றாலும் மிகை யாகாது. ஒரு பொய் சொல்ல எத்தனை முயற்சிகள் செய்ய வேண்டியுள்ளது! ஆனால் உண்மை சொல்ல வேண்டுமானால்? அது நேரான ராஜ மார்க்கம். சத்தியமே தவம், சத்தியமே தர்மம், சத்தியமே பிரம்மம், சத்தியமே மனிதனின் ஆஸ்தி. 'சத்யமேவ ஜயதே நான்ருதம்' என்று வேதம் கூறுகிறது.

**அச்வமேதஸஹஸ்ரம் ச ஸத்யம் ச துலயா த்ருதம்।**
**அச்வமேதஸஹஸ்ராச்ச ஸத்யமேவ விசிஷ்யதே॥** மகாபாரதம்

ஆயிரம் அச்வமேத யாகங்களைவிட சத்தியமே மேலானது. நாம் சத்தியசந்தராக வாழ்வோம். சத்தியத்தில் இறைவனை ஆராதிப்போம்.

# 25. கர்மமும் கர்மயோகமும்

கர்மம் என்றால் செயல். சரீரம், இந்திரியங்கள் வாக்கு மனம் இவை அனைத்தினாலும் செய்பவையே கர்மங்கள் எனப்படும். ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு பிராணியும், புழு பூச்சிகளும் கூட தங்கள் செயல்களை சதா செய்துகொண்டே வாழ்க்கையை நடத்து கின்றன. கர்மத்தைச் செய்யாமல் எவரும் சும்மா இருக்க முடியாது. இதையே கீதையில் ஸ்ரீகிருஷ்ணரும் '**ந ஹி கச்சித் க்ஷணமபி ஜாது திஷ்டதி அகர்மக்ருத்**' (3-5) என்று தெரிவித்துள்ளார்.

ஒரு செயலைச் 'செய்' என்று யாருக்கும் அறிவுறுத்தத் தேவையில்லை. ஆனால் எந்த ஒரு செயலையும் பற்று இல்லாமல் செய்வதைப் பற்றி தான் உபதேசம் அவசியமாகிறது. ஒரு செயலை 'நான் செய்கிறேன்' அல்லது 'இன்ன பலனுக்காக செய்கிறேன்' என்பது நமக்கு பந்தனம் ஆகி விடுகின்றன. இதுவே கர்மத்தின் தலைவிதி! இது நமக்கு தெரிந்த விஷயம் தான்.

**கர்ம யோகம்** என்றால் என்ன? எல்லாக் கர்மங்களையும் இறைவனுக்கே அர்ப்பணித்து, அன்புடன் செய்வதே '**கர்ம யோகம்**'. இறைவனுக்காக, இறைவனின் சேவகனாகி, இறைவனின் கட்டளை என்று எண்ணிச் செய்யும் முறையே '**கர்ம யோகம்**' ஆகும். "**கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி ஸமர்பயாமி**" என்னும் பாவனையே '**கர்ம யோகம்**'. 'யோகம்' என்பது இறைவ னுக்கும் நாம் செய்யும் கர்மங்களுக்கும் உள்ள **சம்பந்தம்** ஆகும். நாம் அகங்காரத்தோடு செய்யும் கர்மங்கள் நமக்கு **பந்தனம்** மற்றும் பாரம் ஆகின்றன. ஆனால், இந்த கர்மங்களைக் **கர்ம யோகமாகச்** செய்யும் பொழுது அவையே சம்சாரக் கடலைத் தாண்ட உதவு கின்றன. பாரத நாட்டின் தர்மம் என்னும் ஜோதியின் இரகசியமே கர்ம யோகம். வேத சாஸ்த்திரங்கள் இதை நமக்கு அறிவுறுத்து கின்றன. நாம் செய்யும் செயல்களை கர்மமாக செய்யும்போது மனம் பாரமாகி சஞ்சலம் அடைகிறது. அதையே கர்ம யோகமாகச் செய்யும் போது மன நிம்மதி கிடைக்கிறது. இறைவனே ஆட்டுவிப்பவன் நாம் அவன் கைப்பொம்மைகள்.

# 26. யாரும் ஏழைகள் அல்லர்

மனிதர்களை ஆண், பெண்—என்று இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். இது இறைவனின் படைப்பு. இறப்பு வரையிலும் ஆணாகப் பிறந்தவன் ஆணாகவும், பெண்ணாக பிறந்தவள் பெண்ணாகவும் இருக்கிறார்கள். ஆண் பெண்ணாவதும் பெண் ஆணாவதும் இயற்கையில் சாத்தியமில்லை. சமூகமும் இது போன்று மனிதர்களை ஏழை, பணக்காரன், என்று இரண்டாகப் பிரித்துள்ளது. செல்வம், கார், பங்களா, தங்கம், வைரம், உள்ளவரை செல்வந்தர் என்றும் இத்தகைய சம்பத்து இல்லாதவரை ஏழை என்றும் கூறுகிறது.

இன்றைய பணக்காரன் நாளை ஏழையாகவோ, ஏழை பணக்காரனாகவும் ஆகலாம். ஆனால், வேதாந்தத்தின் பார்வை யில் இறைவனின் மக்களாகிய நாம் எவரும் ஏழைகளில்லை. மனிதர்கள் எல்லோரும் உண்மையில் செல்வந்தர்களே ஆவர்.

செல்வந்தன் என்பது வெளித் தோற்றத்தில் இல்லை. சிலருக்குப் பணம், கார், பங்களா இருக்கும். மற்றும் சிலருக்கு தேகாரோக்யம், மேதா சாமர்த்தியம் இருக்கும். உண்மையில் இந்த மனிதப் பிறவியே பெரும் செல்வம் அல்லவா ? பேசும் சக்தி இல்லாத விலங்குகளைப் பார்க்கும் போது நாம் எத்தனைப் பெரிய செல்வந்தர்கள் என்று உணருகிறோம்.

இதற்கு ஒரு சின்ன கதை—ஒரு ஊரில் விவேகியும், சிறந்த பேச்சாளனும் ஆகிய செல்வந்தனும், அதே ஊரில் ஒரு ஏழையும் இருந்தார்கள். ஏழை வீடு வீடாகச் சென்று "நான் ஏழை, பாவி, எந்த சம்பத்தும் இல்லாதவன் எனக்கு உதவி செய்யுங்கள்" என்று கூறிக்கொண்டு சென்றான். இதை பார்த்த அந்த செல்வந்தன் அவனை தன் வீட்டுக்கு அழைத்துச்சென்று அவனிடம் இவ்வாறு கூறினான். "ஆஹா, நீ என்னை விட எத்தனை செல்வந்தன். நீ நல்ல ஆரோக்கியசாலி, உன் கை கால்கள் திறமாக உள்ளன. கண் கள், செவிகளும் கூட நன்றாக உள்ளன. இதைக்கேட்ட ஏழை மனம் மாறுகிறது. யாரும் ஏழைகள் அல்லர் என்ற உண்மையை உணர்ந் தான். மனித ஜன்மத்தை அடைந்த 'யாருமே ஏழைகள் அல்லர்' இந்த உண்மையை உணர்ந்து சந்தோஷமாக வாழ்வோமாக.

# 27. நரகத்தின் மூன்று வாயில்கள்

புண்ணிய கர்மத்தினால் சொர்க்க லோகமும் பாப கர்மங்களினால் நரக லோகமும் கிடைக்கின்றன என்பது நம் நம்பிக்கை. சாஸ்திரங்களும் இதையே தெரிவிக்கின்றன. இந்த சொர்க்க லோகம் மற்றும் நரக லோகம் மரணத்தின் பிறகு உண்டாகக் கூடிய பலன் என்று நாம் எண்ணுகிறோம். சொர்க்க லோகத்தையோ, நரக லோகத்தையோ இந்த உலகில், நாம் பார்க்க முடியாது. ஆகையால் இதைப்பற்றி நாம் சிந்திக்கத் தேவையில்லை.

இந்தப் பூமியில் வாழும் போதே உண்டாகும் சொர்க்க, நரக அனுபவங்களை நாம் விசாரம் செய்ய முடியும். சொர்க்க சுக அனுபவத்தை அடைய முயற்சிப்பவன் திறமைசாலியே. ஆனால் நரகானுபவத்திலிருந்து தப்பிக்க முயற்சிப்பவர் அவர்களைவிட தீரர்களே. நரகம் என்றால் சர்வ துக்கங்களுக்கும் இருப்பிடம். சுகம், சாந்தி, நிம்மதி எதுவுமின்றி, கொடிய நோய்களால் வருந்துபவர்கள் அழுது அரற்றுவதை 'நரகவேதனை' என்று சொல்கிறோம் அல்லவா? இந்த நரகத்திற்கு மூன்று வாயில்கள் உள்ளதாக பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கீதையில் (16-21) கூறுகிறார்.

**த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசனமாத்மன:।**
**காம: க்ரோதஸ்ததா லோப: தஸ்மாதேதத் த்ரயம் த்யஜேத்॥**

காமம், குரோதம், மற்றும் லோபம் எனும் மூன்று தோஷங்களும் நரகத்திற்கு வாயில்களாக உள்ளன. இவை மூன்றினாலும் வாழ்க்கை சர்வ நாசமாகி விடுகிறது. ஆகையால் இந்த மூன்றையும் நாம் விலக்கவேண்டும். இவற்றின் சொரூபத்தைச் சிந்திப்போம்.

**காமம்:** இது நிறைக்க முடியாத ஒரு ஜாடி. காமம் என்றால் துராசை. எல்லாவற்றையும் ஆசைப்பட வைக்கும் எதிரி.

**குரோதம்:** இது எல்லாவற்றையும் அழிக்கும் பயங்கரமான எதிரி. எல்லா அனர்த்தங்களுக்கும் மற்றும் துக்கங்களுக்கும் மூலமானதே கோபம். கோபத்தினால் சம்சாரம் சர்வ நாசமாகிறது.

**லோபம்:** எவ்வளவு இருந்தாலும் போதும் என்ற பாவனை இல்லாமல் இருப்பது. சுயநலத்தின் எல்லையே லோபம்.

இந்த மூன்று குணங்களே நரகத்தின் வாயில்கள். இந்தத் தீய சக்திகளினால் எல்லா அனர்த்தங்களும் உண்டாகின்றன.

# 28. தியாகத்தினால் ஆனந்தம்

‘தியாகம்’ என்ற சொல்லே பலருக்குப் பயத்தை ஏற்படுத்துகிறது. தியாகம், தானம், தர்மம், அன்பளிப்பு—இச்சொற்களே பலருக்கும் அலர்ஜியாகிறது. நாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருளை அல்லது பணத்தைப் பிறருக்கு ஏன் தானம் செய்ய வேண்டும்? நாம் யாருக்கும் ஒரு பைசா கூட தானம் செய்ய மாட்டோம் என்று பலர் வாதம் செய்கிறார்கள்.

உண்மைதான். அவரவர் கருத்து அவரவர்களுக்குச் சரி. நாம் எதிர்வாதம் செய்ய வேண்டாம். ஆனால், வேத சாஸ்த்திரங்கள் **த்யாகேனைகே அம்ருதத்வம் ஆநசு: தேன த்யக்தேன புஞ்ஜீதா: த்யாகாத் சாந்தி: நாஸ்தி த்யாகஸமம் ஸுகம்; த்யாகாதேவ பரா சாந்தி: த்யோகோ ஹி பரமம் ஸுகம்**—என்றெல்லாம் கூறுகின்றன. இதன் இரகசியம் என்ன என்பதைப் பார்ப்போம்.

தியாகம் என்றால் விடக் கூடியது, கொடுக்கக் கூடியது என்று பொருள். இயற்கையின் நியதியிலேயே தியாகமும் கலந்துள்ளது. மனிதரில் மட்டும் அல்லாமல் பசு, பக்ஷி, பிராணிகளிலும் தியாக உணர்வு இயல்பாக அமைந்துள்ளது. குருவி, காக்கை, கோழி, கிளி போன்ற பறவைகள் தம் குஞ்சுகளுக்காக ஆகாரத்தைத் தேடி அளிப்பதைப் பார்க்கிறோம். பூனை, ஆடு, மாடு, குரங்கு போன்ற பிராணிகளும் காட்டு விலங்குகளான சிங்கம், புலி, யானை போன்ற விலங்குகளும் தம் குட்டிகளுக்கு தம் உணவைத் தியாகம் செய்கின்றன. மரம், செடி கொடிகள, காய்கறி பூ, பழங்களும், நமக்காக தியாகம் செய்வதும் இயற்கையாக அமைந்துள்ளது.

இவ்வாறு இருக்கும்போது நாம் ஏன் தியாகம் செய்ய பயப்பட வேண்டும். பரோபகாரமே தியாகத்தின் மற்றொரு பெயர். நம்மிடம் இருக்கும் செல்வத்தை ஸத் பாத்திரங்களுக்கு தானம் செய்யும் போது அவர்கள் அடையும் ஆனந்தம் உண்மையில் நம்முடையதே அல்லவா? It is rather the giver who is more blessed than the taker என்று ஸ்வாமி விவேகானந்தரும் கூறியுள்ளார்.

**பரோபகாராய பலந்தி வ்ருக்ஷா: பரோபகாராய வஹந்தி நத்ய:।**
**பரோபகாராய துஹந்தி காவ: பரோபகாராய ஸதாம் விபூதய:॥**

தியாகத்திலிருந்தே ஆனந்தம் என்பது இப்போழுது புரிகிறதா?

# 29. ஞானமே மேலான சம்பத்து

இந்த விசாலமான உலகில் எத்தனையோ சம்பத்துகள் உள்ளன. இவைகள் ஒவ்வொன்றும் விசேஷமானதே. எதுவும் கீழானது இல்லை. எல்லாம் முக்கியமானதே ஆகும். வித்யை, புத்தி, ஆரோக்கியம், ஆயுள். செல்வம், அழகு, அதிகாரம், கீர்த்தி, வீடு, மனைவி, கணவன், மக்கள்—இந்த சம்பத்துக்களில் எது தான் ஒருவனுக்கு வேண்டாம்! எல்லா சம்பத்துக்களும் எல்லோருக்கும் தேவையே. ஆனால், நாம் விரும்பும் செல்வங்கள் எல்லாம் நமக்கு கிடைக்கின்றனவா ? எல்லாவற்றையும் அடைய நாம் சித்த புருஷர்களோ அல்லது சத்ய சங்கல்பரோ அல்லவே!

அப்படி என்றால் இந்த சம்பத்துக்களில் மிக முக்கியமான ஒன்றை நாம் சம்பாதித்துக் கொள்ள வேண்டாமா ? இந்த சிறப்பான சம்பத்துத் தான் ஞானம். ஞானம், வித்யை, அறிவு எல்லாம் ஒன்றே. இறைவன், மற்றும் சத்குருவின் அருளினால் மனிதன் அடையக் கூடிய உத்தமமான செல்வமே ஞானம். மனிதப் பிறவியில் ஞானத்தை விட மிக உயர்ந்தது எதுவும் இல்லை.

சர்வஜ்ஞனும், ஞான சாகரனும், ஜகத்குருவும் ஆகிய ஸ்ரீ கிருஷ்ணர் பகவத்கீதையில் (4-38) இவ்வாறு கூறியுள்ளார். "**ந ஹி ஜ்ஞானேன ஸத்ருசம் பவித்ரமிஹ வித்யதே**", ஞானத்துக்கு சமமான பவித்ரமும் சிரேஷ்டமும், உத்தமமுமான சம்பத்து இந்த பதினான்கு லோகங்களிலும் வேறு எதுவும் இல்லை. இது எவ்வளவு சத்தியமான வார்த்தை.

ஞானத்தைப் பெறுவதற்கே நமக்கு இந்த மனிதப் பிறவி வாய்த்துள்ளது. ஞானத்தாலேயே மற்ற எல்லா செல்வங்களும் கிடைக்கின்றன. ஞானமே சத்தியமானது. மிக விலையுயர்ந்த சம்பத்து. ஞானமில்லாதவன் இரண்டு கால் விலங்குக்கு சமம். ஞானமில்லாத வாழ்வு ரசமற்றது.

**ஸ்வக்ருஹே பூஜ்யதே மூர்க: ஸ்வக்ராமே பூஜ்யதே ப்ரபு: ।**
**ஸ்வராஷ்ட்ரே பூஜ்யதே ராஜா வித்வான் ஸர்வத்ர பூஜ்யதே ॥**

கற்றோருக்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு அல்லவா ? நாமும் ஞானம், நீதி, வித்யை, சம்பத்து, இறையுணர்வு போன்ற எல்லா நலன்களும் பெற்று மகிழ்ச்சியோடு வாழ்வோம்.

# 30. பேராசையினால் தான் துன்பம்

ஒவ்வொரு பிராணியும் உயிர் வாழ சில அடிப்படைத் தேவைகள் உள்ளன. மனிதர்களுக்கும் சுகமாக வாழ சில பொருட்கள் மிக அவசியமாக உள்ளன. இந்த போக வஸ்துக்களை மூன்றாகப் பிரிக்கலாம். உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க வீடு—இந்த மூன்றும் கண்டிப்பாக தேவையானதே. மனிதன் இவைகளை அடைய ஆசைப்படுவதும் நியாயமானதே.

ஆனால், இந்த ஆசைகளைத் தவிர வேறு ஆசைகள் எல்லாம் பேராசைகளே. தன் சுகத்திற்குத் தேவையான வஸ்துக்கள் இருந்தாலும் 'இதுவும் வேண்டும், அதுவும் வேண்டும், எல்லாம் எனக்கே வேண்டும்' என்பதே பேராசை. இதையே தாயுமான சுவாமிகள் "ஆசைக்கோர் அளவில்லை அகிலம் எல்லாம் கட்டி ஆளினும்" என்று கூறியுள்ளார். பேராசையினால் மனிதன் துக்கங்களையும் கஷ்டங்களையும் வரவழைத்துக் கொள்கிறான்.

இதற்கு ஒரு சின்னக் கதை—ஒரு ஏழை இறைவனைக் குறித்துத் தவம் செய்தான். இறைவன்அவன் முன் தோன்றி 'பக்தா உனக்கு என்ன வேண்டும்?' என்றார். எனக்கு நிறைய செல்வம் வேண்டும் என்றான் அவன். இறைவன் அவனை ஒரு பக்தனாகிய செல்வந்தனிடம் அனுப்புகிறான். செல்வந்தன் ஏழையை வரவேற்று, "பக்தா உனக்குத் தேவையான நாணயங்களை என் கஜானாவிலிருந்து எடுத்துகொள். அறுபது நிமிடம் ஆன பின் மணியடிக்கும், உடனே நீ வெளியே வந்துவிட வேண்டும்" என்று கூறினான். ஏழை ஒரு பெரிய பையில் அங்கு தென்பட்ட பித்தளை நாணயங்களை நிரப்பிக்கொண்டு வரும்போது செம்பு நாணயங்களை பார்த்தான். உடனே பித்தளை நாணயங்களைக் கொட்டி விட்டு செம்பு நாணயங்களை அள்ளிக் கொண்டு வரும்போது வெள்ளி நாணயங்களைப் பார்த்தான், செம்பு நாணயங்களைக் கொட்டி வெள்ளி நாணயங்களை நிறைத்துக் கொண்டு வரும்போது தங்க நாணயங்கள் தென்பட்டன. வெள்ளி நாணயங்களைக் கொட்டினான். மணி அடிக்கும் சப்தம் கேட்டது. காலியான பையோடு "பேராசையினால் பெரு நஷ்டமாயிற்றே" என்று வருத்தமுடன் வீடு திரும்பினான்.

# 31. உயிர் வாழும் போதே செய்ய வேண்டும்

எண்பத்தி நாலு லக்ஷம் வகையான ஜீவராசிகளில் மனிதனே மிகவும் அதிர்ஷ்டசாலி. சக்தியும், புத்தியும், நிறைந்தவனாக இருக்கிறான். இந்த ஆறடி மனிதன் வானத்தையும் பூமியையும் ஒன்றாக்கும் வல்லமை பெற்றுள்ளான். பஞ்ச பூதங்களையும் வென்று தன் வசப்படுத்திக் கொள்ளும் திறமை உள்ளவன். கப்பலின் உதவியால் மகா சமுத்திரங்களையே எளிதில் தாண்டி விடுகிறான். ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் உள்ள நாடு களுக்கு விமானம் மூலம் பறந்து செல்கிறான்.

மனிதன், தன் புத்தி சாமர்த்தியத்தினாலும் அதிகார சக்தியி னாலும் உலகையே மாற்றி அமைக்கிறான். வேத சாஸ்த்திரங்களை அத்யயனம் செய்தும், யஜ்ஞும், யாகம், ஜபம், பூஜை, தவம், போன்றவற்றினாலும் வேறு லோகங்களையும் அடையமுடியும். தேவாதி தேவர்களையும் தன் சுவாதீனத்திற்குள் கொண்டுவர முடியும். தான தர்மங்களைச் செய்து அதன் மூலம் நலிந்தவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரலாம். மனம் வைத்தால் மனிதன் சொர்க்கலோகத்தையே பூமிக்குக் கொண்டு வரலாம். மனிதனால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. ஏன் என்றால் சர்வ வல்லமை யுடைய இறைவனின் புத்திரன் தானே இந்த மனிதன்.

நினைவு இருக்கட்டும்! இவ்வளவையும் மனிதன் உயிர் வாழும் போது தான் செய்ய முடியும். இறந்த பின் இவன் உடல் நெருப்புக்கு அர்ப்பணமாகி விடுகிறது. இவன் சரீரத்திற்கு ஏது விலை? இந்த உடம்பை யாரும் வீட்டில் பாதுகாப்பது இல்லை. ஆனால், ஒரு கோழியோ, ஆடோ, மாடோ இறந்த பின்னரும் அதற்கு விலை உள்ளது. யானை, புலி போன்ற விலங்கிற்கும் அதன் தந்தம், தோல் ஆகியவற்றிற்கும் மதிப்பு இருக்கின்றன. ஆனால் மனிதன் இறந்த பின், அவனது உடல் யாருக்கும் தேவையில்லை.

அதனால் நாம் **உயிர்வாழும் போதே** தானம், தர்மம், பரோபகாரங்களைச் செய்ய வேண்டும். தெய்வ பக்தியினால் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும். உயிர் வாழும்போதே உலகிற்கு நன்மை செய்து பவித்ரமான மனிதப் பிறவியைப் பயன் படுத்திக் கொள்ளுவோம்.

# 32. சுகம் நம்மிடமே உள்ளது

'சுகம்' என்ற சொல் மிகவும் அழகானது, எல்லோருக்கும் விருப்பமானது. இதைத் தான் ஆங்கிலத்தில், Happiness, Bliss, Peace, Tranquillity, Ease, Rest, Calmness என்றெல்லாம் சொல்கிறார்கள். சுகம் என்ற சொல்லிற்கு சம்ஸ்கிருதத்தில் விசேஷமான அர்த்தம் உண்டு. **"சோபனானி கானி யஸ்மின் தத் ஸுகம்"** அதாவது சுபமாகிய இந்திரிய மனோபுத்திகள் உள்ள மனதின் ஆனந்த நிலையே 'சுகம்' எனப்படும்.

இப்படிப்பட்ட சுகம் யாருக்குத் தான் வேண்டாம்? ஒவ்வொரு மனிதனும் கடிகாரத்தின் முள் சுற்றுவது போல் ஓயாமல் ஒழியாமல் உழைப்பது, சுகத்தைச் சம்பாதிப்பதற்கே என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. சின்னக் குழந்தையிலிருந்து நூறு வயது மனிதன் வரை ஒவ்வொருவரும் வாழ்வது சுகத்திற்காகவே. சுகத்திற்காக பணம், சுகத்திற்காக வீடு, சுகத்திற்காக பொன், வெள்ளி, ஆபரணங்கள், கார், பங்களா, பதவி, ஆரோக்கியம் முதலியவை, மொத்தத்தில் சுகத்திற்காகவே இந்த சம்சார ஜீவனம். இந்தக் கருத்து நூற்றுக்கு நூறு உண்மை.

ஆனால்.....! இந்த போக சம்பத்துக்களினால் யாருக்காவது சுகம் கிடைத்திருக்கிறதா? இந்தக் கேள்விக்கு என்ன பதில் தெரியுமா? "சுகம் இன்னும் கிடைக்கவில்லை, இனி மேல் கிடைக்க லாம்" என்பதே. இது என்ன விபரீதமான கருத்து! இவைகளால் கண்டிப்பாக சுகம் கிடைக்காது என்று தெரிந்திருந்தும், அதற்காக வாழ்க்கை முழுவதும் உழல்வது பிரமை தானே! **சுகம் கடைகளில் பணம் கொடுத்து வாங்கும் பொருள் அல்ல.** நினைவு இருக்கட்டும்.

அப்படி என்றால் சுகம் எங்கு கிடைக்கிறது? எப்படிக் கிடைக்கும்? சுகம் நமக்குள்ளேயே இருக்கிறது. விவேகத்தினால் மட்டுமே அடையக் கூடியது. Happiness is the state of MIND. It is within us. It cannot be purchased in shops. Happiness can be easily experienced by one and all. நாமே ஆராய்ந்து பார்த்தால், நாம் சுகசொரூபமாகவே உள்ளோம். ஆனந்தத்தின் இருப்பிடம் நாமே. சுகம் நம் நிஜ சொரூபமே என்ற ஞானத்தை அடைவோமாக.

# 33. எளிமையினாலே சுகம்

ஒவ்வொரு மனிதனும் சுகத்தை அடையவே விரும்புகிறான். சுகங்களைப் பெறுவதற்காக ஆயிரக் கணக்கான மைல்கள் போய் வருகிறான். அரண்மனை போன்ற பெரிய வீடுகளைக் கட்டிக் கொள்கிறான். விலையுயர்ந்த ஆடைகளை அணிந்து கொள்கிறான். லட்சக்கணக்கில் செலவு செய்து வாகனங்களை வாங்குகிறான். இவ்வளவு செய்தும் மனிதனுக்கு சுகம் மாத்திரம் ஏன் கிடைப்பதில்லை? சுகத்தைப் பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

இதுவே நம் கேள்வி. இந்தக் கேள்வி மிகவும் கடினமானது ஆனால் நியாயமானது. இதன் பதில் மிகவும் எளிதாகவும், சுலபமாகவும் உள்ளது. "எளிமையினால் தான் சுகம்". மனிதன் எவ்வளவு எளிமையாக வாழ்க்கை நடத்துகிறானோ, அந்த அளவு சுகமாகவும் நிம்மதியாகவும் இருக்க முடியும். It is very simple to become very happy. But alas, it is very very difficult to become very simple!!

இன்றைய நாகரீகத்தின் வளர்ச்சியினால் நாம் ஆடம்பரம் என்னும் அரக்கனின் பிடியில் அகப்பட்டுக் கொண்டுள்ளோம். எல்லா இடங்களிலும் ஆடம்பரம், போலித்தனம், பகட்டுத்தனம், நேர்மையின்மை, நாணயமின்மை—இவற்றையே பார்க்கிறோம். இதையே ஆங்கிலத்தில் Artificiality, Hypocrisy, Show, Pretence, Insincerity, Dishonesty என்று சொல்வார்கள்.

வரம்புக்கு மீறி செலவு செய்வதால் கடன்படுகிறான். பின் அந்த கடனுக்கு வட்டி கட்ட முடியாமல் கஷ்டங்களை அனுபவிக்கிறான்.

ஆனால் எளிமையில்? இயல்பான, நேர்மையான வாழ்க்கையில் ஆடம்பரம் இல்லை. செலவுகள் இல்லை. கஷ்டங்களும் சிரமங்களும் இல்லை. எந்த வக்கீல்களின் உதவியும் தேவையில்லை. எளிமையில் தான் எவ்வளவு நிம்மதி, சுகம்! எத்தனை சுலபமானது. நம் அதிர்ஷ்டத்தையும் பிராரப்தத்தையும் அநுசரித்து வாழ்க்கையை எளிதாக மாற்றிக் கொண்டு ஆனந்தத்தை அனுபவிப்போமாக!

# 34. இயற்கை கற்றுத் தரும் பாடங்கள்

மனிதன் என்றென்றும் மாணவனாகவே இருக்கிறான். இவன் எவ்வளவு கற்றிருந்தாலும், இன்னும் கற்பதற்கு ஏராளமானவை உள்ளன. இன்று சிறு கிராமங்களில் கூட கல்விக் கூடங்கள் ஏற்பட்டுள்ளன. கல்விக்கான செலவும் மலையளவு உயர்ந்து விட்டது. அதே போன்று, கல்வி கற்பதற்கு நிறைய சிரமங்களும் உள்ளன. எவ்வளவு கற்றாலும் மனிதனுக்குத் திருப்தியும் ஏற்படுவதில்லை. இன்றைய கல்வியின் குறிக்கோள் பணம் சம்பாதிப்பதே. இதுவே, இன்றைய மாணவர்களின் நோக்கமாகவும் உள்ளது.

இத்தகைய உயர் கல்வி பெற வேண்டுமானால் அதற்கு நிறைய தகுதி, சாமர்த்தியம், பணம், தகுந்த சூழ்நிலை, சிபாரிசுகள் எல்லாம் மிக அவசியம். எல்லா மாணவர்களாலும் M.D., M.S., M.E., Ph.D., போன்ற பட்டங்கள் பெறமுடியாது. எல்லோரும் Nobel laureates ஆகவும் முடியாது அல்லவா? ஆசை இருக்கலாம்; தகுதியும் இருக்கலாம்; ஆனால், படிக்க இடம் கிடைப்பது கஷ்டம் அல்லவா? இதற்கு "அவரவர் அதிர்ஷ்டம்' என்பதே பதிலாகக் கிடைக்கும்!

சரி, இத்தகைய அதிர்ஷ்டசாலிகள் ஆயிரத்தில் ஒருவர் இருக்கலாம். அப்படியானால் நம்மைப் போன்றவர் கதி என்ன? நாமும் கல்விபெற வேண்டுமானால், எங்கு, எந்தக் கல்லூரியில் சேரவேண்டும்? இதற்குப் பதில் இங்கே தரப்படுகிறது.

இயற்கையிலிருந்தே ஒவ்வொரு மனிதனும் கல்வி கற்க முடியுமே! இயற்கைதான் நம் முதல் ஆசிரியர். இயற்கை அன்னையிடம் இருந்து நாம் எத்தனையோ பாடங்களைக் கற்கலாம். Universe is the University, Nature is the teacher, man is the student, teaching is free, experience is the examination and eternal happiness is the result.

இயற்கை என்னும் அன்னையின் கர்ப்பத்தில் அடங்கியுள்ள சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், சமுத்திரங்கள், காடு, மலைகள், நதிகள், செடி-கொடிகள், பகல் இரவு—இவைகளிலிருந்து கற்க வேண்டிய பாடங்கள் ஏராளம் உள்ளன. இயற்கைத் தாயின் விச்வ வித்யாலயத்தில் எல்லா மனிதர்களுக்கும் அனுமதி இலவசம். இதிலிருந்து நாம் கல்வி கற்போம். எல்லா நலமும் பெற்று வாழ்வோம்.

# 35. இதுவும் இறைவனின் பூஜையல்லவா?

கோவில்களில் இறைவனையும், மடங்களில் குருவையும் வழிபடும் வழக்கம் எல்லா மதங்களிலும் உள்ளன. இந்து மதம், கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாம், ஜைனம், பார்ஸி, சிக்கீய மதம் முதலிய எல்லா மதத்தினவரும் அவரவர் மத வழக்கப்படி இறைவனை வணங்குகின்றனர். அவரவர் நம்பிக்கை, அவரவர் பாவனைகளை அனுசரித்து வழிபடுவது சரியான முறையே; இதில் தவறு எதுவும் இல்லை.

ஏனென்றால், எங்கும் நிறைந்தவனும், எல்லாம் வல்லவனும் ஆகிய இறைவன் தான் லக்ஷக்கணக்கில் உள்ள பெயர் மற்றும் உருவங்களில் காணப்படுகிறான். இதையே வேதங்கள் **ஏகம் ஸத்விப்ரா: பஹுᵕதா வதந்தி**—என்று கூறுகின்றன. பாரதீய சம்பிரதாயத்தில் தேவ பூஜை என்றால் மிகவும் மங்களகரமும் பவித்ரமுமான வழிபாடு ஆகும். நீராடி, தூய்மையான ஆடை அணிந்து வேத மந்திரங்களைச் சொல்லி, தியானம் முதலான ஷோடச உபசாரங்களால் வழிபடுவதே தேவ பூஜை எனப்படும்.

தேவ பூஜை என்றால் வேத மந்திரங்களை உச்சரிப்பதும், தெய்வம் என்றால் விக்கிரகம், படம், சாலிக்கிராமம், சிவலிங்கம்—மட்டுமே அல்ல. இப்படிப் பாவனை செய்பவர்கள் அவ்வாறு செய்யட்டும்.

தெய்வம் என்றால் **'திவ்யதி இதி தேவ:'**. நம் கண்ணுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் எல்லா வஸ்துக்களும் இறைவனே. மரம், செடிகொடிகள், சூரிய சந்திரர்கள், நதிகள், தீர்த்த க்ஷேத்திரங்கள் புன்னகை புரியும் குழந்தைகள் ஆகிய அனைத்தும் இறைவனின் சொரூபமே. இவர்களை இறைவன் என்று பாவனை செய்வதே தெய்வ பூஜை.

வெளி ஆடம்பர பூஜையை விட எல்லோரிடமும் கருணை காட்டுவதும், நம்முடைய அறிவு, செல்வம், அதிகாரம் ஆகியவற்றை பிறருக்காக பயன் படுத்துவதும் தெய்வ பூஜை அல்லவா! இத்தகைய பூஜைக்கு வேண்டிய பூக்கள்—அன்பு, பரிவு, கருணை முதலானவையாகும். இவைகளை வளர்த்துக் கொண்டால், இதன் மூலம் கடவுளின் அருளுக்குப் பாத்திரமாவோம்.

# 36. தர்மத்தின் பத்து முகங்கள்

மனிதன் தர்மத்தையே பின்பற்ற வேண்டும் என்று எல்லா மதங்களும் கூறுகின்றன. தர்மமே இறைவன் என்றும் தர்மத்தில் தான் இந்த உலகம் நிலைபெற்றுள்ளது என்றும் வேதோபநிஷத்கள் அறிவிக்கின்றன. இவை தர்மத்தின் பத்து முகங்கள்:

**த்ருதி: க்ஷமா தமோsஸ்தேய சௌசமிந்த்ரியநிக்ரஹ:।**
**தீர்வித்யா ஸத்யமக்ரோத: தசகம் தர்மலக்ஷணம்॥**

இவற்றின் சுருக்கமான விளக்கம்—

1. **த்ருதி**: தைரியம். வாழ்க்கையில் கஷ்ட நஷ்டங்கள், மான அவமானங்கள் வந்தபோதும், விவேகத்தினாலும், தைரியத்தினாலும் அவைகளை எதிர்க்கும் மன உறுதி.
2. **க்ஷமா**: நம்மை யாராவது நிந்திக்கும் போதும், அவமானம் செய்யும் போதும், பொறுமையுடன் அவர்களை மன்னிப்பது.
3. **தமம்**: மனதைக் கெடுத்துக் கொள்ளாமல் எப்பொழுதும் சாந்தமாகவும், சந்தோஷமாகவும், உறுதியாகவும் வைத்துக் கொள்வது.
4. **அஸ்தேயம்**: பிறர் பொருளைக் குப்பை என்று எண்ணக் கூடிய மனபக்குவம். தங்கமாகயிருந்தாலும் தம்முடையதில்லை என்றால், ஏறெடுத்தும் பார்க்காமல் இருக்கும் சுபாவம்.
5. **சௌசம்**: நம் சரீரத்தையும், ஆடைகளையும் மற்றும் இருப்பிடத்தையும், அழுக்கில்லாமல் தூய்மையாக வைத்திருத்தல்.
6. **இந்திரிய நிக்கிரகம்**: கண், காது, மூக்கு, நாக்கு மற்றும் மனதை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல்.
7. **தீ**: விவேகத்தோடு கூடிய புத்தியினால் செய்யும் கர்மங்களை மன உறுதியோடு செய்தல்.
8. **வித்யை**: சாஸ்திர நூல்களை அத்யயனம் செய்தும், சத் புருஷர்களின் உபதேசங்களைக் கேட்டும், ஞானத்தைப் பெறுதல்.
9. **சத்தியம்**: எப்படிப்பட்ட கஷ்டமான நிலையிலும் பொய் சொல்லாமல், சத்தியத்தையே பெருமையுடன் கடைபிடித்தல்.
10. **அக்ரோதம்**: கோபம் ஏற்படக் கூடிய சூழ்நிலைகளில் கோபத்திற்கு வசப்படாமல் சாந்தமாக இருத்தல்.

# 37. ஏறுவது கஷ்டம், விழுவது சுலபம்!

வாழ்க்கையில் எந்தச் சாதனையும் சுலபமல்ல. 'மந்திரத்தால் மாங்காய் விழச் செய்ய முடியுமா?' இந்த விசாலமான பிரபஞ்சத்தில் ஆயிரக்கணக்கான கலைகள் உள்ளன. எல்லாக் கலைகளையும் கற்றுத் தேர்ச்சி அடைவது இயலாத ஒன்றே.

ஒருவன் புகழ் பெற்ற விஞ்ஞானியாகவோ, கைராசியுள்ள மருத்துவராகவோ அல்லது கைதேர்ந்த கலைஞராகவோ ஆக வேண்டுமானால் கடுமையான பயிற்சி செய்யவேண்டும். ஒருவன் ஆதர்ச சந்நியாசியாகவோ, சித்த புருஷனாகவோ, வேத கனபாடி களாகவோ அல்லது ஒரு சொற்பொழிவாளன் ஆகவேண்டு மானாலும் கூட சிறப்பான தவம் செய்ய வேண்டியுள்ளது. எந்தத் துறையிலும் ஒருவன் உன்னதமான நிலைக்கு வரவேண்டுமானால் மிகவும் கடினம்.

மனிதன் தான் அடைந்த உயர்ந்த ஸ்தானத்திலிருந்து வழுக்கி விழுவது மிகவும் சுலபம். கீர்த்தி பெறுவது மிகவும் கஷ்டம், அபகீர்த்தி அடைவது சுலபம். வீட்டைக் கட்டுவது மிகவும் கஷ்டம், ஆனால் அதை உடைப்பது? ஐம்பதாவது மாடிக்கு நீரைக் கொண்டு செல்வது கஷ்டம், ஆனால் அந்த நீரைக் காலி செய்வது மிக சுலபம். மாடி ஏறுவது கஷ்டம், அங்கிருந்து வழுக்கி விழுவது சுலபம். பத்து ரூபாய் நேர்மையான வழியில் சம்பாதிப்பது கஷ்டம். ஆனால் ஆயிரம் ரூபாயை நிமிடத்தில் செலவு செய்துவிடலாம்.

நாம் எதிலிருந்தும் வழுக்கி விழாமல் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். மனிதர்களாகிய நாம் மனிதத் தன்மையி லிருந்து விலகி விட்டால் நம் கதி அதோகதி ஆகிறது. நம் வாழ்க்கைத் தரம் எப்பொழுதும் மேல் நோக்கிச் செல்ல வேண்டும். சத்திய நிஷ்டனாக வாழ்வது கஷ்டம்; சத்தியத்தை விட்டு வாழ்வது எளிது. ஸ்ரீராம சந்திர மூர்த்தியைப் போல் வாழ்வது கஷ்டம். இராவணனைப் போல் வாழ்வது எளிது. நாம் ஸ்ரீராமரைப் போல் வாழ வேண்டுமே தவிர இராவணனைப் போல் வாழக் கூடாது. நினைவு இருக்கட்டும்! ஏறுவது கஷ்டம் ஆனால், வழுக்கி வீழுவது சுலபம்.

# 38. மனிதர்களாக வாழ்வோமா ?

மனிதன் தான் பிறவி எடுத்ததன் பயனைப் பெற வேண்டுமானால் முதலில் மனிதனாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். மனிதனுக்கு மட்டுமே இறைவன் விவேகம் என்ற செல்வத்தைக் கொடுத்துள்ளான். விவேகமில்லாமல் வாழ்க்கை நடத்தும் மனிதன் இரண்டு கால் விலங்காகக் கருதப் படுகிறான். மனிதன் தன் தந்தையாகிய இறைவனை ஆராதிப்பதே அவனது முக்கியமான கடமையாக வேண்டும். மனிதனே மனிதனுக்கு உதாரணமாக வேண்டும். இதுவே இறைவனின் மகிழ்ச்சிக்குக் காரணமாகிறது.

இன்று, விவேகியான மனிதர்களுக்கு, பசு, பறவை விலங்குகளை உவமை சொல்வது வழக்கில் உள்ளது. உதாரணமாக, இவன் குயிலைப் போல் பாடுகிறான், மயிலைப் போல் ஆடுகிறான், மீனைப் போல் நீந்துகிறான், குதிரையைப் போல் ஓடுகிறான், பறவை போல் ஆகாயத்தில் பறக்கிறான் போன்றவை வழக்கிலுள்ள உவமைகள். சில சந்தர்ப்பங்களில் மனிதர்களைத் திட்டும் போது கழுதை, நாய், எருமை, போன்ற மிருகங்களையும் உவமைப் படுத்திக் கூறுகிறோம், விவேகியும் புத்திசாலியும் ஆகிய மனிதனை இவ்வாறு பிராணிகளோடு உவமைப்படுத்துவது எவ்வளவு கேவலமானது. குயில் கூவுவதும், மயில் ஆடுவதும், இறைவன் அவைகளுக்கு அளித்துள்ள சம்பத்து. அந்தக் கலைகளை மனிதன் கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறான்.

ஆனால் இவைகளினால் மனித ஜன்மம் முழுமையாகிறதா ? மனிதன் மனிதனாக வாழ்ந்தால் மட்டுமே பிறவி எடுத்ததன் பலன் உண்டாகும். Man can fly like birds, sing like cuckoos, dance like peacocks, swim like fishes; But alas! Man cannot live like a man. இது ஸ்வாமி விவேகானந்தர் நூறு வருடங்களுக்கு முன்னரே மிகவும் வருத்தத்துடன் கூறியுள்ள கருத்து ஆகும். இது எத்தனை உண்மையான கருத்து!

மனிதராகிய நாம் அன்பான பேச்சு, பரோபகாரம், தெய்வ பக்தி, நேர்மை, சத்தியம், புலனடக்கம், சாஸ்த்திர உபதேசங்களைக் கேட்டு உணர்தல், சமூகசேவை ஆகிய உயர்ந்த கொள்கைகளைக் கடைபிடித்து நல்ல மனிதர்களாக வாழ்வோம்.

# 39. உலகை வெல்லும் வழி

இந்த அற்புத மனிதன் எல்லோரையும் அடக்கி வாழ ஆசைப்படுகிறான். தானே வெற்றி வாகை சூடவேண்டும் என்பதே ஒவ்வொரு மனிதனுடைய குறிக்கோள். கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் வெல்லவேண்டும் என்று நினைக் கின்றனர். பெற்றோர் தங்கள் குழந்தைகளையும், குழந்தைகள் பெற்றோரையும் தங்கள் ஆளுமைக்குள் கொண்டுவர ஆசைப் படுகின்றனர். ஆசிரியர் மாணவன், தலைவன் குடிமக்கள், மாமியார் மருமகள், என்று அனைவரும் பரஸ்பரம், ஒருவரை ஒருவர் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? நமக்குள்ளே இருக்கும் எதிரியை நாம் வெல்லாமல் இருப்பதே. அந்த எதிரி தான் துஷ்டனாகிய மனம். இதற்கு 'சஞ்சல ராஜா' என்று பெயர். **பத்து 'மகார' சஞ்சலப் பொருட்களில்** மனமே அரசன். Mind is the king of the ten most mischievous things.

**மனோ மதுகரோ மேகோ மானினீ மதனோ மருத்।**
**மா மதோ மர்க்கடோ மத்ஸ்ய: மகாரா தச சஞ்சலா:॥**

மனம், தேனீ, மேகம், பெண், மன்மதன், காற்று, லக்ஷ்மி, மதம், குரங்கு, மீன்—ஸம்ஸ்கிருத மொழியில் உள்ள பத்து மகாரங்களும் சஞ்சலத் தன்மை பெற்றவையாகும்.

இந்த சஞ்சலமான மனதை வெல்லா விட்டால் எதை வென்றாலும் என்ன பிரயோஜனம்? இந்தச் சஞ்சலம் படைத்த மனதிற்கு அடிமையாகியவர்கள் கதி எத்தனை பரிதாபமானது. இவர்கள் இந்த முழு உலகத்திற்கும் அடிமையாகி, துக்கிகளாகி விடுகின்றனர். மனதில் ராகத்வேஷம், காமக்ரோதம், லோபமோகம், மதமாத்ஸர்யங்களே நிறைந்துள்ளன. இத்தகைய தோஷங்களை அழித்துக் கொள்வதின் மூலமே மனதை வெல்ல முடியும். மனதை வென்றவரே உலகை வென்றவர்கள் ஆகிறார்கள். இதையே நம் முன்னோர்கள் '**ஜிதே மனஸி ஜிதம் ஸர்வம்**', என்று சொல்லி யுள்ளார்கள். இந்த மனதை வென்றால், நாமும் மகாத்மா ஆகலாம். உலகமே நம் காலடியில் சரணடையும். நாமும் உலகை வென்ற வர்கள் ஆகலாம்.

# 40. மனமே மந்திரம் ஆகட்டும்

சம்சாரம் என்ற தாபத்தினால் துன்புறும் மனிதர்களுக்கு மனச் சாந்தி அளிக்கும் இடமே இறைவனின் இருப்பிடமாகிய கோவில் ஆகும்! ஒரு தேவாலயத்திற்குள் நுழைந்தவுடன், பக்தர்களுக்கு எல்லா துக்கங்களும் மறைந்து விடுகின்றன. அவர்கள் மனதில் பரிவு, இரக்கம், அன்பு, பக்தி, சத்தியம், தியாகம், நேர்மை ஆகிய பாவனைகள் உண்டாகின்றன. ராகத்வேஷங்களை மறந்து எல்லோரும் ஒருவரையொருவர் பரிவுடன் காண வேண்டும்.

ஆனால், இன்று ஆலயங்களில் பவித்ரமான சூழ்நிலை உள்ளதா? வீட்டை விட்டுக் கோவிலுக்கு எதற்காகப் போகிறோம் என்று தோன்றும் படியான நிலையே எங்கும் காணப் படுகிறது. இந்த ஆலயங்கள் அரசியல் கூடாரங்கள் ஆகிவிட்டால் அவற்றின் கதி என்ன? வியாபார ஸ்தலங்களாக மாறிய இந்த இடங்களில் இறைவன் வாசம் செய்வானா?

அப்படியென்றால் இறைவன் எங்குள்ளான்? இக் கேள்விக்கு கீதாசார்யனாகிய கிருஷ்ணரின் பதிலைப் பார்ப்போம்.

**ஈச்வர: ஸர்வபூதானாம் ஹ்ருத்தேசேऽர்ஜுன திஷ்டதி।**
**ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா॥** கீதை 18-61

அர்ஜுனா! இறைவன் எல்லா பிராணிகளின் இருதயத்திலும் வசிக்கிறான். ஈச்வரன் தன் மாயா சக்தியினால் இந்த உடலாகிய யந்திரத்தை இயக்குகிறான். நம்முள்ளேயும் இறைவன் இருக்கிறான் என்பது நிரூபணமாகிறது. 'ஈச்வரன்' என்றவுடன் நாம் ஜடாமுடி, கங்கை, கபாலம் ஏந்திய பரமசிவன் என்று பொருள் கொள்ள வேண்டியதில்லை. ஈச்வரன் என்றால் எல்லா உயிர்களுக்கும் உள்ளும் வெளியும் இருந்து கொண்டு, எதிலும் ஒட்டாமல் ஸச்சிதானந்த சொரூபனாகவும் பரிசுத்தனாகவும் உள்ள பரமாத்மா ஆவான். இவனே நம்முள்ளும் இருக்கும் இறைவன். மனம் என்னும் கோவிலில் மாதவனைக் கண்டால் அந்த விச்வரூபத்தை எங்கும் காண முடியும். நம் மனமே பவித்ரமான இறைவன் வாழும் ஆலயமாகட்டும்.

# 41. எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை !

அரசர்கள் தங்கள் குடிமக்களுக்கும், மருத்துவர்கள் நோயாளி களுக்கும், ஜோதிடர்கள் நண்பர்களுக்கும், ஆசிரியர்கள் மாணவர் களுக்கும், வக்கீல்கள் கட்சிக்காரர்களுக்கும் எச்சரிக்கை செய்வதை நாம் கண்டுள்ளோம். அவர்கள் சொற்படி நடப்பதும் நன்மையில் முடிகின்றன; கேட்காவிட்டால் கெடுதலும் விளைகிறது.

நம் முன்னோர்களான மகரிஷிகளும் நமக்கு எச்சரிக்கை மணி அடித்துள்ளனர். இந்த பவித்ரமான பாரத பூமியில் ஆயிரக் கணக்கில் இத்தகைய எச்சரிக்கை சந்தேசங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றை இங்கு பார்ப்போம்—

**அனித்யானி சரீராணி விபவா நைவ சாச்வதா:।**
**நித்யம் ஸம்னிஹிதோ ம்ருத்யு: தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத ॥**

ஒ மானிடர்களே, உங்கள் சரீரங்கள் அநித்யமானவை. இந்த வைபவம், செல்வம், அதிகாரம், அழகு, புகழ் எல்லாமே நிலை யற்றவை. நினைவு வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் கூடவே காலனும் எப்பொழுதும் இருக்கிறான். ஆகையால் தர்மத்தைக் கடைப்பிடியுங்கள். விரைவில் ஆத்ம ஞானத்தைப் பெற்று பாக்கிய சாலிகளாக மாறுங்கள். எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை!!

இது எவ்வளவு ஆழமான அர்த்தமுள்ள எச்சரிக்கை! இங்கு மூன்று தடவை எச்சரிக்கை மணியை அடித்துள்ளனர். பஞ்ச பூதங்களினால் உண்டாகிய இந்த சரீரம் மண் பாண்டம் போன்றது. எப்பொழுது வேண்டுமானாலும் இந்தப் பானை உடைந்து பொடிப் பொடியாகலாம். இதை நம்ப வேண்டாம். இது முதல் எச்சரிக்கை. உங்களுடைய எந்த சம்பத்தும் நிரந்தரமானது அல்ல. செல்வம், பணம், இளமை, பதவி, அதிகாரம், முதலான சம்பத்துக்களெல்லாம் கண நேரத்தில் அழியக்கூடியதே. இந்த நிலையற்ற சம்பத்துக்களை நம்பி அகங்காரத்தினால் ஆணவம் கொள்ளாதீர்கள், என்பது இரண்டாம் எச்சரிக்கை. எந்த நிமிடம் வேண்டுமானாலும் உங்களுக்கு மரணம் வரலாம். பிறவி எடுத்த எந்தப் பிராணியும் அமரனாக இருக்க முடியாது. மரணம் உங்களை நிழல் போல் பின் தொடர்கிறது, என்பது மூன்றாம் எச்சரிக்கை இத்தகைய எச்சரிக்கைகளைப் பின்பற்றி தீரர்களாக வாழ்வோம்.

# 42. விஞ்ஞானமும் வேதாந்தமும்

இது விஞ்ஞான உலகம். நம் வாழ்க்கை இன்று இயந்திர மயமாக மாறியுள்ளது. பிறந்ததிலிருந்தே நம் வாழ்க்கையில் விஞ்ஞானத்தின் பாதிப்பு ஆரம்பமாகி விடுகிறது. விஞ்ஞான முன்னேற்றத்தினால் வருங்காலத்தில் நாமும் இயந்திரமாக மாறி விடலாம். விஞ்ஞானத்தின் பலனாக இன்று கிராமங்கள் முதல் நகரங்கள் வரை எல்லா இடங்களிலும், டெலிவிஷன், ரேடியோ, கம்பியூட்டர் போன்ற நவீன வசதிகள் பெருகியுள்ளன.

இப்பொழுது பணத்திற்கும் பஞ்சமில்லை. எல்லோரும் செல் வந்தர்களாக மாறியுள்ளனர். ஏழைகளுக்கும் எல்லா வசதிகளும் கிடைக்கின்றன. இன்று பணத்தினால் எதையும் வாங்கமுடியும். ரெடிமேட் ஆடைகள், நகைகள், உணவு வகைகள் என்று நிறைய கிடைக்கின்றன. இவையெல்லாம் இன்றைய நாகரீகத்தின் பரிசு என்றாலும் தவறாகாது. These are the contributions of Modern Scientific Technologies: This is modern civilisation.

இந்த விஞ்ஞான வளர்ச்சியினால் மனிதனுக்கு சாந்தி மற்றும் ஆனந்தம் கிடைத்துள்ளதா ? இதை ஆராய்ந்து பார்த்தால் கிடைக் கும் பதில் **மௌனமே.** இந்த நாகரீகத்தாலும், ஆடம்பரத்தாலும், சாந்தி, திருப்தி கண்டிப்பாகக் கிடைக்காது. The modern scientific technologies have made our life just comfortable and easy, but not at all happy, peaceful and blissful.

இந்த இடத்தில் வேதாந்தத்தின் உபதேசத்தைப் பார்ப்போம். எளிமை, திருப்தி, புலனடக்கம், இறைவன் மீது தியானம், பரஸ்பர அன்பு ஆகிய பண்புகளால் மனதிற்கு சாந்தி மற்றும் ஆனந்தம் கிடைக்கும் என்று வேதாந்தங்கள் கூறுகின்றன. மனத் திருப்தியி னால் கிடைக்கும் ஆனந்தம் உலக போகங் களினால் கிடைக்காது. வேதாந்தத்தில் தெரிவித்துள்ள பரப்பிரம்ம தத்துவத்தைச் சரியாகப் புரிந்து கொண்டால் அவன் பாக்கியசாலி ஆகிறான். அசாந்தி, அதிருப்தி, கோபதாபம், ராகத்வேஷம், சுயநலம், போன்றவற்றால் நிறைந்துள்ள இந்த உலகத்திற்கு வேதாந்தம் ஒன்று தான் ராம பாணம். நாம் விஞ்ஞானத்தில் முழுகியிருந்தாலும் வேதாந்த சந்தேசங்களையும் உணர்ந்து, பிரம்மானந்தத்தைப் பெறுவோம்.

# 43. இது பிரம்ம ஞானத்தின் மகிமை

இந்த விசாலமான உலகில் கற்க வேண்டிய விஷயங்கள் ஏராளமாக உள்ளன. ஒவ்வொரு வித்யையிலும் ஆயிரக் கணக்கான பிரிவுகள் உள்ளன. அவைகளையெல்லாம் ஒரு மனிதனால் தன் ஆயுட் காலத்தில் சிறப்பாகக் கற்க முடியாது. ஒவ்வொரு வித்யையும் கடலைப் போல் விசாலமாக உள்ளது!

**அனந்தசாஸ்த்ரம் பஹு² வேதிதவ்யம்**
**அல்பச்ச காலோ பஹுவச்ச விக்னா:।**
**யத் ஸாரபூதம் ததுபாஸிதவ்யம்**
**ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்புமிச்ரம்॥**

**பொருள்:** கற்கவேண்டிய சாஸ்த்திரங்கள் அநேகம். அறிய வேண்டிய வித்யைகள், விஷயங்கள் ஏராளம். ஆனால் மனிதனுக்கு ஆயுள் மட்டும் மிகவும் குறைவாகவே உள்ளது. ஒரு வித்யையைக் கற்க வேண்டுமானால் அவனுக்கு நூற்றுக் கணக்கில் தடைகளும் ஏற்படுகின்றன. இப்படி இருப்பதால் விவேகியான மனிதன் அவற்றின் சாரமானதையே சம்பாதித்துக் கொள்ள வேண்டும். பாலையும் நீரையும் கலந்து கொடுத்தாலும் அன்னப் பறவையானது சாரமான பாலை மட்டுமே அருந்துகிறதில்லையா?

இந்த வேத சாஸ்த்திர, இதிகாச புராணங்களின் சாரமாகிய உபதேசங்கள் இதையே நமக்கு அறிவுறுத்துகின்றன. பரப்பிரம்மம் தான் இந்த உலகிற்குக் காரணம் என்றும் பரமாத்மனே எல்லா ஜீவர் களின் பரமார்த்த சொரூபம் என்றும் உபநிஷத்துகள் கூறுகின்றன.

உபநிஷத்துக்களின் மற்றொரு பெயர் தான் வேதாந்தம். வேதாந்தங்களில் தெரிவித்திருக்கும் வித்யைக்கு 'பிரம்ம வித்யை', 'பிரம்ம ஞானம்' என்று பெயர். பிரம்ம வித்யையினால் தான் முக்தி கிடைக்கும். அதுவே எல்லா வித்யைகளின் சாரம். **'ஸர்வ வித்யாப்ரதிஷ்டாம் ப்ரஹ்மவித்யாம்'** என்று மாண்டுக்ய உபநிஷத்து புகழுகின்றது.

**ராஜவித்யா ராஜகுஹ்யம் பவித்ரமிதமுத்தமம்।**
**ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸு²ஸு²கம் கர்துமவ்யயம்॥** கீதை 9-2

என்பது கீதையின் உபதேசம். பாரத நாட்டின் அழிவற்ற சம்பத் தான பிரம்ம ஞானத்தைப் பெற்று ஆனந்தத்தை அனுபவிப்போமாக!

# 44. ‘த’ காரத்தின் மூன்று சந்தேசங்கள்

நமது பாரத சம்பிரதாயத்திற்கு வேதங்கள் தான் அஸ்திவாரம். வேதங்களின் சாரமே வேதாந்தம். வேதாந்தங்களில் பிரம்ம வித்யையுடன், நீதி, தர்மம், கடமை, ஹாஸ்யம், போன்றவற்றையும் கதைகளின் மூலம் தெரிவித்துள்ளார்கள். இவை மனித குலம் முழுவதிற்குமே மார்க்கதரிசனம் அளிக்கும் அகில உலக உபதேசங் கள் ஆகும். இத்தகைய ஒரு நல்ல உதாரணத்தை இங்கு பார்ப்போம். இது சுக்ல யஜுர்வேதத்தைச் சேர்ந்த மிகப் பெரிய உபநிஷத் ஆன **பிரகதாரண்யக உபநிஷத்தில்** வரும் ஒரு கதை:

பிரஜாபதிப் பிரம்மனுக்கு மூன்று வெவ்வேறு குணங்கள் கொண்ட மூன்று மக்கள் உள்ளனர். அவர்கள் தான் தேவதைகள், மனிதர்கள் மற்றும் அரக்கர்கள். இவர்கள் மூவரும் ஒரே தந்தையின் மக்களாக இருந்த போதிலும், அவர்களது குணம், ஸம்ஸ்காரம் மற்றும் சுபாவம் எல்லாம் வேறு வேறாக இருந்தன.

இந்த மூன்று மக்களும் தம் தந்தையாகிய பிரஜாபதியை அணுகி, நமஸ்காரம் செய்து, பக்தியுடன் “பூஜ்யரே, தாங்கள் எங்க ளுக்கு ஒரு அறிவுரையை உபதேசம் செய்யவேண்டும்” என்றார்கள். பிரம்மனும் சந்தோஷமடைந்து, “நீங்கள் ஒரு வருடகாலம் பிரம்மச்சர் யத்தை அனுஷ்டானம் செய்துவிட்டு வாருங்கள்” என்று கூறினார். மூன்று மக்களும் தீவிர தவத்தை மேற்கொண்டு வந்தார்கள்.

தவத்தினால் பரிசுத்தர்களாகிய அம்மூவருக்கும் பிரம்மன் ‘த’ ‘த’ ‘த’ என்ற சொல்லைச் சமமாக உபதேசித்தார்.

“இந்த உபதேசத்திலிருந்து நீங்கள் என்ன புரிந்து கொண்டீர் கள்”**?** என்று பிரம்மன் வினவ மூன்று பேரும் இவ்வாறு பதில் அளித்தனர்:

போகத்தில் முழ்கியிருக்கும் தேவதைகள் ‘தமம்’ (புலனடக்கம்) என்றும் கருமிகளும் சுயநலமிக்கவர்களுமான மனிதர்கள் ‘தானம்’ என்றும், இரக்கமற்றவரும், கொடூர குணமுள்ளவருமான ராக்ஷஸர் கள் ‘தயை’ (இரக்கம்) என்றும் தம் தந்தையின் உபதேசத்தை பொருள் கொண்டனர்.நாமும் **த**மத்தையும், **தா**னத்தையும், **த**யையையும், நம் அன்றாட வாழ்வில், கடைபிடித்து மனிதன் என்ற பெயருக் கேற்றவாறு வாழ்வோமாக.

# 45. ஏன் மனிதர்களுக்கே உபதேசங்கள் ?

இந்த விசாலமான பூமியில் நூற்றுக்கணக்கில் மதங்கள், சம்பிரதாயங்கள், கொள்கைகள் இருக்கின்றன. அந்தந்த மதங்களின் சித்தாந்தங்களையும் உபதேசங்களையும் விவரிக்கும் நூல்களும், அவைகளை உபதேசம் செய்யும் மதாசார்யர்களும் பலர் உள்ளனர். இன்று எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும், தத்தம் மதத்தின் தத்துவங்களை அறிந்து கொண்டு, அவரவர் தகுதிக்கு ஏற்ப சாதனைகளை செய்வதையும் நாம் காண்கிறோம். இந்த உலகில் எத்தனையோ பிராணிகள், பறவைகள் இருக்கின்றனவே! அவைகளுக்கு யாரும் உபதேசம் செய்வதில்லையே! இந்த பசுப் பிராணிகளைத் தவிர்த்து விட்டு மனிதனுக்கு மட்டுமே ஏன் உபதேசம் செய்கிறார்கள் ? சத்தியத்தைச் சொல்; தர்மத்தைச் செய்; இம்சை செய்யாதே; சுயநலமாக இருக்காதே; திருடாதே— இத்தனை உபதேசங்கள் மனிதர்க்கு மட்டும் உள்ளன. ஏன் ?

இந்தக் கேள்வி நியாயமானதே; உயர்ந்த மேதாவிகளும் ஆராய்ச்சியாளர்களும் கூட கேட்கக் கூடியதே. திருட்டு, வஞ்சனை, மோசடி, அநியாயம், பிற உயிர்களை இம்சை செய்வது மற்றும் சுயநலத்தோடும், கருமியாகவும் வாழ்வது மனிதன் மட்டுமே யல்லவா ? தன் சுயநலத்திற்காகவும், சுகத்திற்காகவும் இந்த இரண்டு கால் பசுவான மனிதன் என்ன வேண்டுமானாலும் செய்வான். இத்தகைய கெட்ட எண்ணங்கள் நான்கு கால் பிராணி களுக்குக் கிடையவே கிடையாது.

இறைவன் கொடுத்த உணவு மற்றும் நீரைக் குடித்து விட்டு திருப்தியாக இருக்கும் பிராணிகளுக்கு யாரையும் வஞ்சனை செய்யத் தெரியாது. மனிதனுடைய ஆகாரங்களுக்கு இந்த பிராணி கள் ஆசைப் படுவதில்லை. ஆனால், இந்த மனிதன் அந்த பிராணி களையே ஆகாரமாக்கிக் கொள்கிறான். மனிதன் காட்டுக்குள் சென்று வேடையாடுகிறான்; காட்டை வெட்டி நாடாக்கி, ஏரிகளைத் தூர்த்து வீடுகளைக் கட்டிக் கொள்கிறான்; தன்னை மிக உயர்ந்தவனாகவும் காண்பித்துக் கொள்கிறான். ஆகையால் அவிவேகியும் துரகங்காரியும் சுயநலமிக்கவனுமான மனிதனுக்குத் தான் மகாத்மாக்களின் உபதேசம் அவசியமாகிறது.

# 46. பிரம்மச்சர்யத்தின் ஐந்து முகங்கள்

இந்த உலகில் உள்ள எல்லா தர்ம நூல்களும் பிரம்மச் சர்யத்தைப் புகழ்ந்து பேசுகின்றன. பிரம்மச்சர்யத்தைவிட மேலான தவம் இல்லை என்று வேதங்களும் புராணங்களும் சிறப்பித்துக் கூறுகின்றன. பிரம்மச்சர்யத்தினால் எல்லா சித்தி களையும் அடைய முடியும் என்பது முனிவர்கள் அனுபவத்தில் கண்ட உண்மை.

பிரம்மச்சர்யம் என்ற சொல்லிற்கு ஐந்து அர்த்தங்கள் உள்ளன. பிரம்மம் + சர்யம் என்று இரண்டு சொற்கள் உள்ளன. 'பிரம்மம்' எனும் சொல்லிற்கு மட்டுமே ஐந்து அர்த்தங்கள் உள்ளன.

**வேதஸ்தத்வம் தபோ ப்ரஹ்ம, ப்ரஹ்மா விப்ர: ப்ரஜாபதி:** என்று அமரகோசத்தில் கூறப் பட்டுள்ளது. 'பிரம்ம' எனும் வார்த்தைக்கு அஃறிணையில் முறையே வேதம், பரப்பிரம்மம் மற்றும் தவம் என்று மூன்று அர்த்தங்களும், ஆண்பாலாகக் கருதும் பொழுது பிராம்மணன் மற்றும் சதுர்முக பிரம்மன் என்று இரு அர்த்தங்களும் உள்ளன. இதை அனுசரித்து **பிரம்மச்சர்ய** சப்தத்திற்கும் ஐந்து அர்த்தங்களைக் கூறலாம்.

1. **பிரம்மச்சர்யம்—வேத**ங்களை அத்யயனம் மற்றும் அத்யா பனம் செய்து அதிலேயே ஆழ்ந்து இருப்பது.
2. **பிரம்மச்சர்யம்**—முழு உலகத்திற்குக் காரணமாகிய **பரப்பிரம் மத்தை** அறிந்து கொண்டு **பிரம்ம நிஷ்ட**னாக இருப்பது.
3. **பிரம்மச்சர்யம்**—இந்திரிய நிக்கிரகம் உடையவனாக குரு சேவையைச் செய்துகொண்டு **தபோநிஷ்டனாக** இருப்பது.
4. **பிரம்மச்சர்யம்—பிராம்மண்யத்தைக்** காப்பாற்றிக் கொண்டு, அத்யயனம் அத்யாபனம், யஜனம் யாஜனம், தானம் கொடுத்தல் மற்றும் பெற்றுக் கொண்டு வாழ்தல்.
5. **பிரம்மச்சர்யம்**—தேவ பூஜை, **ஹிரண்யகர்ப்ப** உபாசனை செய்து கொண்டு நிவர்த்தி மார்க்கத்தில் செல்வது.

இத்தகைய உயர்ந்த பிரம்மச்சர்யத்தை ஆண் பெண் இருபாலரும் அனுஷ்டானம் செய்து பிரம்ம ஞானத்தை அடைய முடியும். இன்றைய மாணவ மாணவியரும் இத்தகைய பவித்ரமான பிரம்மச்சர்யத்தைக் காப்பாற்றினால் அவர்களுக்கும், உலகத் திற்கும் நன்மை ஏற்படுவதில் சந்தேகமில்லை.

# 47. ஏழு எச்சரிக்கை மணிகள்

ஸ்ரீசங்கரர் மனிதர்களுக்கு வாழ்க்கையின் நிலையாமையை உணர்த்தக் கூறும் ஏழு 'எச்சரிக்கை' அறிவுரைகள்.

**மாதா நாஸ்தி பிதா நாஸ்தி நாஸ்தி பந்து: ஸஹோதர:।**
**அர்த்தம் நாஸ்தி க்ருஹம் நாஸ்தி 'தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத' ॥ 1 ॥**

தாய் தந்தை, உறவினர், சகோதரர், செல்வங்கள், வீடு எதுவும் சத்தியமில்லை. எச்சரிக்கை! எச்சரிக்கை!!

**ஜன்ம து:கம் ஜரா து:கம் ஜாயா து:கம் புன: புன:।**
**ஸம்ஸாரஸாகரம் து:கம் 'தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத' ॥ 2 ॥**

இப்பிறவி, அதில்வரும் முதுமை, பத்னி, சம்சாரம் முதலிய யாவும் துக்க மயமே. எச்சரிக்கை! எச்சரிக்கை!!

**காம: க்ரோதச்ச லோபச்ச தேஹே திஷ்டந்தி தஸ்கரா:।**
**ஜ்ஞானரத்னாபஹாராய 'தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத' ॥ 3 ॥**

காமம், குரோதம், லோபம் என்னும் திருடர்கள் 'ஞானம்' என்னும் இரத்தினத்தை அபகரிக்கலாம் எச்சரிக்கை! எச்சரிக்கை!!

**ஆசயா பத்யதே லோக: கர்மணா பஹுசிந்தயா।**
**ஆயு: க்ஷீணம் ந ஜானாதி 'தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத' ॥ 4 ॥**

ஆசை, கர்மம் இவற்றால் கட்டப்பட்டுள்ள மனிதனின் ஆயுள் குறைந்து கொண்டே வருகிறது எச்சரிக்கை! எச்சரிக்கை!!

**ஸம்பத: ஸ்வப்னஸங்காசா: யௌவனம் குஸுமோபமம்।**
**வித்யுச்சஞ்சலமாயுஷ்யம் 'தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத' ॥ 5 ॥**

எல்லா செல்வங்களும் வெறும் கனவே. இளமை பூவைப் போல் வாடி விடும். ஆயுளும் மின்னலைப் போல் தோன்றி மறைகிறது.

**க்ஷணம் வித்தம் க்ஷணம் சித்தம் க்ஷணம் ஜீவிதமேவ ச।**
**யமஸ்ய கருணா நாஸ்தி 'தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத' ॥ 6 ॥**

செல்வம், மனம், ஜீவிதம் எல்லாம் ஒரு கணப் பொழுதில் மறைந்து விடுகின்றன, யமனுக்குக் கருணை என்பதே இல்லை.

**அநித்யானி சரீராணி விபவா நைவ சாச்வதா।**
**நித்யம் ஸம்நிஹிதோ ம்ருத்யு: 'தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத' ॥ 7 ॥**

சரீரம் அநித்யமானது. சம்பத்துக்கள் நிலையற்றவை. மரணம் நெருங்கி வருகிறது. எனவே, எச்சரிக்கை, எச்சரிக்கை!!

# 48. மரணத்தைக் கண்டு ஏன் மிரட்சி?

இன்றைய நவீன உலகில் மனிதர்கள் எதற்கும் பயப் படமாட்டார்கள். ஏன் என்றால் பணபலம், அதிகார பலம், புத்தி சாமர்த்தியம் முதலியவற்றால் எதையும் சாதிக்க முடியும் என்ற உறுதியான நம்பிக்கை. இது உண்மையாகவும் உள்ளது.

ஆனால், ஒரு விஷயத்தில் மட்டும் எல்லோரும் பயப்படுகின் றார்கள். அது தான் மரண பயம். மரணத்திலிருந்து தப்புவதற்காக எல்லா முயற்சிகளும் செய்கிறார்கள். ஆனால் என்ன செய்தாலும் இவன் ஒரு நாள் இறக்கவே வேண்டும். 'ஜாதஸ்ய மரணம் த்ருவம்'.

ஏன் மனிதர்கள் மரணத்திற்குப் பயப் படுகிறார்கள்? இக்கேள் விக்கு நமது மகரிஷிகள் அளித்துள்ள பதிலைப் பார்ப்போம்.

**ப்ராயேணாக்ருதக்ருத்யத்வாத் ம்ருத்யோருத்விஜதே ஜன:।**
**க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம்॥**

ஞானம் அடையாதவர்களே மரணத்திற்குப் பயப்படுகிறார்கள். ஆனால், ஞானத்தைப் பெற்றவர்கள் மரணத்தை மிகுந்த மகிழ்ச்சி யுடன் ஒரு அதிதியை வரவேற்பது போல் எதிர் கொள்கிறார்கள்.

எவ்வளவு வயது வாழ்ந்தாலும், கஷ்டப்பட்டாலும் மனிதன் ஏன் இன்னும் உயிர் வாழ ஆசைப் படுகிறான்? அவன் மனதில் இன்னும் கர்மங்களின் மீது பற்று உள்ளதால் அல்லவா? "நான் என் கர்மங்களைச் செம்மையாக செய்து முடித்துவிட்டேன். நான் பாக்கியசாலி" என்று அறிந்தவனுக்கு மரண பயம் உள்ளதா?

பயப்பட்டால் மட்டும் மரணம் அவனை விட்டு விடுகிறதா? அப்படி என்றால் மரணம் வராமலிருக்க நாம் என்ன செய்ய வேண்டும். இதற்கு மகாத்மாக்களின் பதிலைக் காண்போம்.

**ம்ருத்யோர்பிபேஷி கிம் மூட? ஜாதம் முஞ்சதி கிம் யம:?**
**அஜாதம் நைவ க்ருஹ்ணாதி குரு யத்னம் அஜன்மனி॥**

ஓ, மூடனே! மரணத்தைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? பிறந்தவனை மிருத்யு விட்டு விடுகிறானா? பிறக்காதவரை மிருத்யு தொடவும் மாட்டான். ஆகையால் மேலும் பிறக்காதபடி செய்து கொள். ஜன்மமற்ற ஆத்மனே நான் என்பதை அறிந்து, மரண பயத்திலிருந்து விடுபடுவோமாக.

# 49. சூரியனும் விளக்கிக் காட்ட முடியாதது

வேதங்கள், வேதாந்தங்கள், புராணங்கள் என்று சாஸ்திரங் களை மூன்றாகப் பிரித்துள்ளனர். வேதங்களின் இருதயமே வேதாந்தங்கள். வேதங்களின் விரிவான உபதேசங்கள் தான் புராணங்கள். வேதாந்தங்களிலும் புராணங்களிலும் பரமாத்மனை அறிய வேண்டும் என்று சொல்லியுள்ளனர்.

வேதாந்தங்கள் என்றால் உபநிஷத்கள். வேதாந்தங்களில் தெரிவித்திருக்கும் பரமாத்மனுக்குப் பரப் பிரம்மம் என்று பெயர். இவன் தான் நம் எல்லோருக்கும் உள்ளிருக்கும் பரமாத்மா, பகவான் மற்றும் ஈஸ்வரன் எனப்படுகிறான். இந்த முழு ஜகத்திற்கும் காரணமாகியிருப்பதும் இந்தப் பரமாத்மனே ஆவான்.

ஆனால், புராணங்களில் இந்த பரமாத்மனையே வேறு வேறு பெயர்களினாலும், ரூபங்களினாலும் உபதேசித்துள்ளன; இவர் களுக்குப் பௌராணிக தேவதைகள் என்று பெயர். இத்தகைய தேவதைகள் அநேகர் உள்ளனர். அவர்கள் இந்திரன், சந்திரன், பிரம்மா, விஷ்ணு, ஈஸ்வரன், மித்ரன், வருணன், அர்யமா மற்றும் அக்னி முதலியோர் ஆவர். இந்த தேவதைகளுக்குத் தனிப்பட்ட உருவம், மனைவி, உலகம், ஆயுதம் முதலானவை உள்ளன.

பரப்பிரம்மம் ஆண் பெண் போன்ற எந்த குறிப்பிட்ட உருவத் தையோ பெயரையோ உடையதல்ல. இவனே, எல்லோருடைய உள் ளிருக்கும் ஆத்மா. இவனை யாரும் எந்த பிரமாணங்களினாலும் தெரிந்து கொள்ள முடியாது. இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் பிரகாசிக்கும் சூரியனாலும் இந்த பரமாத்மனை விளக்கிக் காட்ட முடியாது. ஏன் என்றால் சூரியனுக்கும் இவனே பிரத்யகாத்மனாக இருக்கிறான். **"ந தத்பாஸயதே ஸூர்யோ ந சசாங்கோ ந பாவக:"** என்று கீதையிலும் கூறியுள்ளது (15-6) **ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம்। நேமா வித்யுதோ பாந்தி குதோऽயமக்னி:। தமேவ பாந்தமனுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி॥** என்று காடக உபநிஷத்தும் கூறுகிறது. இப்படிப் பட்ட ஸச்சிதானந்தரூப னாகிய, சூரியனுக்கும் தந்தையாகிய பரமாத்மனை சூரியனாலும் விளக்கிக் காட்ட முடியாது. இந்த ஆத்மனை நான் என்று அறிந்தவனுக்கு துக்க சம்சாரத்தின் கஷ்டங்கள் உண்டா?

# 50. செல்வமா ? சாந்தியா ?

இக்காலத்தில் மனிதனின் குறிக்கோள் பணம் ஒன்று தான். பணத்திற்காகவே படிப்பு, அதிகாரம், கீர்த்தி மற்றும் உத்யோகம்— முதலானவை அமைந்துள்ளன. இப்படி மனிதன் பணத்திற்காக என்ன வேண்டுமானாலும் செய்கிறான். மனிதனின் எல்லாச் செயல்களும் பணத்தையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. மொத்தத்தில் மனித வாழ்க்கை முழுவதும் பணத்திற்காகவே என்றாலும் மிகையாகாது. அதனால் தான் 'பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்' என்று கூறப்படுகிறது.

இந்தப் பணத்திற்கு எல்லை இருக்கிறதா ? 'போதும்' என்ற மனநிலை யாருக்காவது உள்ளதா ? எவ்வளவு பணம் வேண்டும் என்று கேட்டால் எவரும் நிறைய வேண்டும் என்றே சொல்வர். பணத்திற்கு வானமே எல்லை. எவ்வளவு பணம் இருந்தாலும் யாருக்காவது திருப்தி எற்படுகிறதா ? இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்பதே எல்லோருடைய ஆசையும் ஆகிறது.

பணத்தினால் சாந்தி மற்றும் சுகங்களை விலைக்கு வாங்க முடியுமா ? We cannot purchase happiness by money in the market or bazaar. கோடீசுவரர்கள் தம்மிடம் நிறைய பண மிருந்தும் சாந்தி மற்றும் சுகம் மட்டும் இல்லை என்று சொல்வதை நாம் கேட்கிறோம். ஆகவே, பணத்தினால் சாந்தி, இன்பம் கிடைக்காது என்பது நாம் அனுபவத்தில் காணும் உண்மை.

நமக்குத் தேவையானது சாந்தி மற்றும் சுகமே. ஆனால் அதை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டாமா ? ஞானத்தினால் தான் சாந்தியும், சுகமும் கிடைக்கும். சுக சொரூபனும் சாந்தியின் நிதியுமாக விளங்கிய ஸ்ரீகிருஷ்ணர் அதற்கான சாதனையைக் கீதையில் (4-39) அழகாகக் கூறியுள்ளார்.

**ச்ரத்தாவான் லபதே ஜ்ஞானம் தத்பர: ஸம்யதேந்த்ரிய: ।**
**ஜ்ஞானம் லப்த்வா 'பராம் சாந்திம்' அசிரேணாதி கச்சதி ॥**

நமக்கு சாந்தி மற்றும் உண்மையான ஆனந்தம் தான் வேண்டு மானால், ஆத்மஞானத்தையே தேட வேண்டும். அத்யாத்ம சாதக ராகி, கீதா சந்தேசங்களையே மீண்டும் மீண்டும் சிந்திப்போமாக. **ஞானத்திலிருந்தே சாந்தி** மற்றும் ஆனந்தம் அடைவோமாக.

‘வேதாந்த சிந்தாமணி’ ‘வேதாந்த சக்ரவர்த்தி’

## கெ. ஜி. சுப்ராயசர்மா அவர்களின்

வேதாந்த கிருதி இரத்தினங்கள்

### 1. சாங்கர ஸம்வத்ஸரம் (கன்னடம்)

**ஸ்ரீ சங்கரரின் உபதேசாம்ருதம்**
**தினம் ஒரு சந்தேசம்**

**1/8 டெமி, 48 + 368 = 416 பக்கங்கள்; விலை: ரூபாய் 250/-**

இந்நூல் ஸ்ரீ சங்கர பகவத்பாதாளின் **பிரஸ்தானத்ரய பாஷ்யங்களான** பகவத் கீதா பாஷ்யம், உபநிஷத் பாஷ்யம் மற்றும் பிரம்மசூத்ர பாஷ்யம் ஆகிய மூன்று நூல்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தேசங்களின் சாகரம் ஆகும். தத்துவ ஜிஜ்ஞாசுக்கள் மற்றும் முமுக்ஷு சாதகர்களுக்கும் மிகவும் பயன் தரும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது. இதில் அடங்கியுள்ள ஸ்ரீ சங்கரருடைய மூல பாஷ்ய வாக்கியங்கள், தாத்பர்யங்கள், விவரணங்கள் மற்றும் ச்லோகங்கள் சாதகர்களுக்கு பிரஸ்தானத்ரய பாஷ்யங்களில் ஈடுபாடும் அளவற்ற ஆவலையும் ஏற்படுத்தும். ஜனவரீ முதல் நாளிலிருந்து டிசம்பர் 31 ஆம் நாள் வரை 366 நாட்களுக்கும் தினம் ஒன்றாக ஸ்ரீ சங்கரரின் சந்தேசங்களை வழங்கும் சாங்கர சந்தேச சாகரம் **சாங்கர ஸம்வத்ஸரம்** ஆகும்.

### 2. வேதாந்த ஸம்வத்ஸரம் (கன்னடம்)

தெலுங்கு, தமிழ், இந்தி மற்றும் ஸம்ஸ்க்ருத மொழிகளில் வெளிவர வுள்ளன.

**தினத்திற்கொரு உபநிஷத் ஸந்தேசம்**
**385 வேதாந்த பவித்ர பாவன ஸந்தேச ரத்ன ஸாகரம்**

**டெமி 1/8, 452 பக்கங்கள்; விலை: ரூபாய் 200/-**

ஈச, கேன, காடக, முண்டக, ப்ரச்ன, மாண்டூக்ய, ஐதரேய, தைத்தரீய, சாந்தோக்ய, பிரகதாரண்யக, ச்வேதாச்வதர, கௌஷீதகி, ஜாபால, மற்றும் கைவல்ய என்னும் **14** உபநிஷத்துகளி லிருந்தும் சேர்ந்தெடுக்கப்பட்ட உபநிஷத் ஸந்தேசங்களின் ஸாகரம் **வேதாந்த ஸம்வத்ஸரம்** ஆகும்.

ஜனவரி **1** ஆம் நாளிலிருந்து டிசம்பர் **31** ஆம் நாள் வரை தினம் ஒன்றாக **366** சந்தேசங்கள், சித்திரை முதல் பங்குனி வரை, மாதத்திற்கு ஒன்றாக, **12** சந்தேசங்கள், ஞாயிறு முதல் சனிவரை, தினம் ஒன்றாக ஏழு சந்தேசங்கள் இப்படி மொத்தம் **366 + 12 + 7 = 385.** வேதாந்த சந்தேசங்களால் நிறைந்துள்ள வேதாந்த காமதேனு, **வேதாந்த ஸம்வத்ஸரம்** ஆகும்.

சன்யாசிகள், சம்சாரிகள், மானவர்கள், பண்டிதர்கள் மற்றும் சாதகர்களுக்கு வேதாந்தத்தில் ருசியை ஏற்படுத்தும் வேதாந்த கிருதி இரத்தினம், **வேதாந்த ஸம்வத்ஸரம்.**

## 3. பிரபோத சிந்தாமணி

**கன்னடம், தெலுங்கு, இந்தி, ஸம்ஸ்கிருதம் மற்றும் தமிழ், ஆகிய மொழிகளில் வெளியாகியுள்ள தத்துவக் கட்டுரைகள் அடங்கியது. விலை ரூபாய் 30/-**


**இந்நூல்கள் கிடைக்குமிடம்:**

1. வெளியிடுவோர்:

   **ஸ்ரீ நித்யானந்த பிரகாசன**
   நம். 46, 4 வது கிராஸ்
   அசோக நகர், பெங்களூர் - 560 050
   © 080-2652 6027, 5767 0191

2. ஆசிரியர்:

   **வேத ப்ரஹ்ம ஸ்ரீ கெ. ஜி. சுப்ராயசர்மா**
   **P. O.** டி. ஆர். நகர்
   பெங்களூர் - 560 028
   மொபைல்: 98862 81622



## ஆசிரியரைப் பற்றிய குறிப்பு

கர்நாடக மாவட்டத்தின் ஹாஸன் ஜில்லாவைச் சேர்ந்த ஹொளேநரசீப்பூர் என்னும் ஊரில் அத்யாத்ம பிரகாச கார்யாலயத்தை ஸ்தாபனம் செய்த பரமபூஜ்ய **ஸ்ரீ ஸ்ரீ ஸச்சிதானந்தேந்த்ர ஸரஸ்வதீ மகா சுவாமிகள்** அவர்களின் நேர் சிஷ்யராகப் பெருமை பெற்றவர் ப்ரஹ்ம **ஸ்ரீ கெ. ஜி. சுப்ராயசர்மா** அவர்கள். அவருடைய பதினாறு வருடகால (1959-1975) நிரந்தர, அகண்ட சத்குருசேவையின் பலனாக குருவின் பரிபூரண அருளுக்குப் பாத்திரமாகிய ஸ்ரீ சர்மா "**சங்கரபாஸ்கர**" என்னும் ஆத்யாத்மிகப் பத்திரிகையின் ஸ்தாபகரும், ஆசிரியரும், வேதாந்த பிரவசனக்காரர் என்னும் சிறப்புகளையும் பெற்றுள்ளார். '**சாங்கர ஸம்வத்ஸரம்**' மற்றும் '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' என்னும் இரண்டு நூல்களை இயற்றியுள்ள **ஸ்ரீ சுப்ராயசர்மா** அவர்களின் எழுதுகோலிலிருந்து தற்பொழுது வெளிவந்திருக்கும் '**பிரபோத சிந்தாமணி**' என்னும் கன்னட நூல், ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளிலும், மக்கள் விருப்பத்திற்கிணங்க வெளியிடப்பட்டுள்ளது.

**30-8-2005** **எஸ். ராமசந்திர ஐயர்**

**விலை: ரூ. 30/-**